விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 024 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 28 திங்கட்கிழமை (12.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# இலங்கையின் புதிய அரசியலமைப்பும் தமிழ் மக்களை ஏமாற்றிவிடக்கூடாது

## பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் கடிதம்





(சென்னை)

இலங்கையில் தற்போது நடைபெற்றுவரும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள், இலங்கைத் தமிழ்ச் சமூகத்திற்கு ஏற்படும் கடுமையான பாதிப்புகளை களைந்திட வேண்டுமென்றும், தமிழ் மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையிலான ஒரு அரசியலமைப்புச் செயல்முறையினைக் கொண்டுவருவதற்கு, இந்திய அரசு இலங்கை அதிகாரிகளுடன் உயர்மட்ட அளவில் தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கோரி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். (04ஆம் பக்கம் பார்க்க)

செம்மணிப் படுகொலை விவகாரம்

# கைகழுவி விடுவதே அதிகாரிகளின் நோக்கம்

## சோமரத்ன ராஜபக்ஷ குற்றச்சாட்டு



காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினர் செம்மணிப் படுகொலை தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்ளாமல், காணாமல்போனோரில் சிலரது குடும்பங்களுக்கு இழப்பீட்டுத்தொகையை வழங்கி, அவ்விவகாரத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, கைகழுவி விடுவதற்கு முயற்சிப்பதாக சோமரத்ன ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார். (04ஆம் பக்கம் பார்க்க)

புகையிரதத்துடன் மோதுண்ட

## இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(அரியாலை)

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற புகையிரத விபத்தில் படு 15ஆம் பக்கம் பார்க்க

## நாகை - காங்கேசன் கப்பல் 18இல் ஆரம்பம்

(சென்னை)

நாகபட்டினம் - காங்கேசன்துறை கப்பல் சேவை எதிர்வரும் 18ஆம் திகதி மீண்டும் தொடங்கப்படும் என்று சுபம் கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது. 04ஆம் பக்கம் பார்க்க

## திருக்கேதீச்சரத்தில் பொங்கல் ஜனாதிபதி அநுர பங்கேற்பு

### யாழ்ப்பாணத்துக்கும் வருகை

(கொழும்பு)

தைப்பொங்கல் தினமான எதிர்வரும் 15ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார்.

முன்னதாக ஜனாதிபதி அநுர மன்னார் திருக்கேதீச்சரத்துக்குச் சென்று அங்கு பொங்கல் நிகழ்வில் பங்கேற்பார். 15ஆம் பக்கம் பார்க்க

## ஐஸ் போதை மாத்திரைகளுடன் இருவர் கைது

(அராலி)

யாழ்.மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்திய விசேட சோதனையின்போது இரண்டு இளைஞர்கள் ஐஸ் போதைப் 04ஆம் பக்கம் பார்க்க

டித்வா புயலால் சேதமான

## வடக்கு ரயில் மார்க்கத்தை புனரமைக்கும் பணி ஆரம்பம்



(கொழும்பு)

டித்வா புயலினால் சேதமடைந்த வடக்கு ரயில் பாதையைப் புனரமைக்கும் பணிகள் நேற்று (11) உத்தி 04ஆம் பக்கம் பார்க்க

## பாடப் புத்தகத்தைக்கூட ஒழுங்காக அச்சிட முடியாத அரசாங்கம்

### புதிய அரசியலமைப்பை உருவாக்குமா? – நாமல்



(கொழும்பு)

பாடப் புத்தகத்தைக் கூட ஒழுங்காக அச்சிடாத அரசாங்கம் எவ்வாறு புதிய அரசியலமைப்பை உருவாக்கும். அரசாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக்கினால் அது ஒற்றையாட்சிக்கு எதிரானதாகவும் நாட்டை பிரிக் 15ஆம் பக்கம் பார்க்க

மாகாண சபைத் தேர்தலை இழுத்தடிக்கும் அரசு

## சங்குக் கட்சியுடன் தமிழரசு இவ்வாரம் மந்திராலோசனை

(யாழ்ப்பாணம்)

மாகாண சபைத் தேர்தல் எந்த முறைமையின் கீழ் நடாத்தப்பட வேண்டும் என்பதை ஆராய்வதற்காக 12 பேரடங்கிய விசேட தெரிவுக்குழுவை நியமிப்பதற்கான யோசனை அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டிருக்கும் நிலையில், தேர்தலை இழுத்தடிப்பதற்கான இந்த முயற்சியை உரியவாறு கையாண்டு, இவ்வருடத்துக்குள் தேர்தலை 15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - அரியாலை ஆனந்தம் வடலி வீதியில் (AV வீதி) 3ஆம் ஒழுங்கையில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 1½ பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- AV வீதி முகப்புடன்
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 4 Km
- விலை பேசித் தீர்மானிக்கப்படும்

(1926)

தொடர்பு:-

**076 860 2770, 076 987 8617**


# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் திட்டமிடற் கிளையில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவரும் செயலக நலன்புரிச் சங்கத்தின் பொருளாளராகக் கடமையாற்றுபவருமான திரு. தவசி தவகர்ணன் அவர்களின் பாசமிகு தாயார்

## அமரர் தவசி சின்னம்மா




தோற்றம் 31.04.1957 மறைவு 11.01.2026

அவர்கள் 11.01.2026 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயர்பகிர்வில்..
பிரதேச செயலாளரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(C-4803)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31 - 05 - 1958 | 11 - 01 - 2026 |

## கார்த்திகேசு பூபதிராஜா

டச்சு வீதி சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பூபதிராஜா அவர்கள் நேற்று (11-01-2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்திகேசு - பகவதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன் - பரமேஸ்வரி தம்பதியினரின் மருமகனும் பாக்கியலக்ஸ்மி அவர்களின் அன்புக்கணவரும் மயூரன், கார்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவனேஸ்வரி (ராணி), வரதராஜா, சடாச்சரதேவி (ரதி), காலஞ்சென்ற புஸ்பவதி(மாலா) மற்றும் ஜீவராஜா ஆகியோரின் சகோதரனும் அவ்வைத்தேவி, அருணகிரிநாதர், அம்பிகா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வரதராஜா +94 76 575 0103
சுகந்தன் + 94 76 313 1973

(C-4800)

தகவல்:
குடும்பத்தினர்

# யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையின் 2025 ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 09.00 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் திருமதி லதாநந்தினி சிவபாதம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும் வடமாகாண மகளிர் விவகார, சமூக சேவைகள் கைத்தொழில் அமைச்சின் செயலாளருமான முத்துலிங்கம் நந்தகோபாலன் கலந்து கொள்வார்.

வெற்றியீட்டிய சாதனையாளர்களுக்கான சான்றிதழ்களை யாழ். இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியை திருமதி சாந்தி நந்தகோபாலன் அவர்கள் வழங்கி வைப்பார். (ந-7)

# அமுத விழாக் காணும் வயாவிளான் மத்திய கல்லூரி

(வயாவிளான்)

யாழ்ப்பாணம் வயாவிளான் மத்திய கல்லூரி 80 ஆண்டுகளை நிறைவு செய்து அமுத விழா காண்கிறது.

இலவசக் கல்வி வழங்கும் அரச பாடசாலைத் திட்டத்தின் கீழ் இப்பாடசாலை 1946 ஆம் ஆண்டு நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அமுத விழாக் கொண்டாட்டத்தின் ஆரம்ப நிகழ்வாக எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் வயாவிளான் சந்தியில் அமைந்துள்ள மானம்பராய் விநாயகர் ஆலயத்தில் விஷேட பொங்கல் வழிபாடுகள் முன்னெடுக்கப் படவுள்ளன. (ந-7)


## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றிற்கு
- துப்பரவு பணியாளர்
- சமையல் உதவியாளர்
- Room boy


தேவை ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள்

தொடர்பு: 075 254 9186

(C-4801)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


# 31ம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



கடந்த 13.12.2025 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் வல்லிபுரம் செல்வவிநாயகம் (விநாயகம்)

அன்னாரது 31ம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் மதிய போசனமும் நாளைய தினம் (13.01.2026) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது சக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் அழைப்பிதழை வழங்க முடியவில்லை. இதனை உணர்ந்து இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பல்வேறு வகைகளில் உதவிகள் புரிந்து அஞ்சலி செலுத்திய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது சிரம் தாழ்த்திய நன்றிகள்.

(1920)

"கணக்கன் சீமா"
நெல்லியடி, கரவெட்டி.

தகவல்:- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூப்பறிக்கச் சென்ற சிறுவன் பரிதாபமாக உயிரிழப்பு

(கொழும்பு)

கல்கிரியாகம - உஸ்ஸான பகுதியில் பூப்பறிக்க சென்ற சிறுவன் குளத்தில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளான்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் தேவஹூவ பகுதியைச் சேர்ந்த 12 வயது சிறுவன் என தெரிவிக்கப்படுகிறது.

குளத்தில் பூ பறிக்கச் சென்றபோது தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8)

# விசேட சுற்றிவளைப்பில் 679 பேர் கைது!

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 30 ஆயிரத்து 322 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் 679 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 14 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 275 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 150 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 507 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 39 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 5 ஆயிரத்து 244 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

# கட்டுநாயக்கவில் ஒருவர் கைது



(கொழும்பு)

சட்டவிரோதமாக நாட்டிற்குள் வெளிநாட்டு சிகரெட்டுகளை கொண்டு வந்த நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

"கிரீன் ரோடு" வழியாக கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து சிகரெட்டுகளை வெளியே கொண்டு செல்ல முயன்றபோது அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கொண்டு வந்த பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 ஆயிரத்து 700 வெளிநாட்டு சிகரெட்டுகளை சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 29 வயதுடைய தொழிலதிபர் என தெரிவிக்கப்படுகின்றது. (8)

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த புதிய திட்டம் - கருணாதிலக்க

(கொழும்பு)

சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக, உள்நாட்டு விமான சேவைகளை வலுப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படுமென துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

உயர் ரக சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு ஈர்க்க, சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படும் வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (8)

# தேசிய கட்டமைப்பின் கீழ் முன்பள்ளிக் கல்வி- பிரதமர் ஹரிணி

(கொழும்பு)

**இலங்கையில் முன்பள்ளிக் கல்வி முறையை ஒன்றிணைத்து, அதனை ஒரு தேசியக் கட்டமைப்பின் கீழ் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**



அலரி மாளிகையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற "சிறுவர் சுகாதார மேம்பாட்டிற்கான தேசிய தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டத்தின்" அங்குரார்ப்பண விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒரு குழந்தையின் எதிர்காலம் மற்றும் நாட்டின் நீண்டகால மனிதவள மேம்பாடு ஆகியவற்றில் ஆரம்பகால பிள்ளைப் பருவ அபிவிருத்தி தீர்மானமிக்க தாக்கத்தை ஏற்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

ஆரம்பகால பிள்ளைப் பருவ அபிவிருத்தி என்பது பெற்றோரின் தனிப்பட்ட பொறுப்பு மாத்திரமல்ல, அது ஒட்டுமொத்த சமூகத்தின் கூட்டுப் பொறுப்பாகும் என அவர் வலியுறுத்தினார்.

ஆரம்பகால பிள்ளைப் பருவ அபிவிருத்தியை கல்வித் துறையின் ஒரு விசேட பிரிவாக அங்கீகரித்து, யுனிசெப் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் புதிய கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் கூறினார். (8)

# பொதுப் பாதுகாப்பு அமைச்சின் இணையத் தள ஊடுருவல்

## விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

பொது பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகப்பூர்வ இணையத்தளம் இனம் தெரியாதவர்களால் ஊடுருவப்பட்டுள்ள சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

குறித்த உத்தியோகப்பூர்வ வலைத்தளமானது பல முறை இனம் தெரியாதவர்களால் ஊடுருவப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சிக்கலை சரிசெய்ய இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு மற்றும் இலங்கை தகவல் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், வலைத்தளத்திலுள்ள சின்னத்தில் சில தெளிவின்மை காணப்பட்டதுடன், பொது பாதுகாப்பு அமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில், அமைச்சின் செயலாளர் கடந்த 9 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடளித்துள்ளார்.

அதற்கமைவாகவே குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

மேலும், பொது பாதுகாப்பு அமைச்சக மட்டத்திலும் உள்ளக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-8)

# ஒரு வருடத்தில் 1540 விழிப்புணர்வு திட்டங்கள் நுகர்வோர் விவகார அதிகார சபை

(கொழும்பு)

கடந்த வருடம் 1,540 நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் வரலாற்றில், ஒரு வருடத்தில் பதிவு செய்யப்பட்ட அதிக எண்ணிக்கையிலான நிகழ்ச்சித்திட்டங்கள் இதுவென தெரிவித்துள்ளது.

நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில், இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதன்மூலம், அதிகாரிகள் 1 இலட்சத்து 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை நேரடியாகச் சந்தித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், நுகர்வோர் மற்றும் வர்த்தகர்களுக்கான விழிப்புணர்வானது மின்னணு, டிஜிற்றல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த சபை தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தை இலக்காகக் கொண்டு இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேலும் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. (8)

# நெடுந்தீவில் இறந்த நிலையில் கடல் ஆமைகள்



(நெடுந்தீவு)

**நெடுந்தீவு மணல் கடற்கரையினை நெருங்கிய பகுதிகளில் இறந்த நிலையில் 5 கடல் ஆமைகள் நேற்றுக் காலை கரை ஒதுங்கியுள்ளன.**

**இது தொடர்பாக நெடுந்தீவு பிரதேச பொலி[illegible] வழங்கப்பட்ட [illegible] அடிப்படையில், குறித்த பகுதிக்கு சென்ற நெடுந்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி [illegible] குழுவினர் [illegible] இறந்த நிலையில் இருந்தமையால் கடற்கரை பகுதியிலேயே அவற்றினை புதைக்க நடவடிக்கையினை மேற்கொண்டனர். (8)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின்...

அக்கடிதத்தில், இலங்கையில் உள்ள தமிழ்ச் சமூகத்தின் நலன் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான ஆழ்ந்த கவலைக்குரிய ஒரு விடயம் குறித்து இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆழமான வரலாற்று, கலாசார மற்றும் உணர்வுபூர்வமான பிணைப்புகளின் காரணமாக, இலங்கையில் உள்ள தமிழர்களின் உரிமைகளையும், எண்ணங்களையும் நிலைநிறுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில், இந்தியா மற்றும் இலங்கையிலுள்ள தமிழ்த் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், இலங்கையில் முன்மொழியப்பட்ட புதிய அரசியலமைப்புத் தொடர்பான பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் அவர்களின் மேலான கவனத்திற்குக்கொண்டு வருவது எனது கடமையாகும்.

இலங்கைத் தமிழர்கள் 77 ஆண்டுகளுக்கு மேலாக, திட்டமிட்ட பாகுபாடு, வன்முறை மற்றும் அவர்களின் உண்மையான உரிமைகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளைச் சகித்து வந்துள்ளனர். இது தங்கள் சமூகத்திற்கு எதிரான இனப்படுகொலை என்று விபரிக்கும் ஒரு நிலைக்கும் வழிவகுத்துள்ளது.

உள்நாட்டுப் போர் முடிவடைந்த கடந்த 16 ஆண்டுகளாக, இந்த ஒற்றையாட்சிக் கட்டமைப்பு, பாரம்பரியமாக தமிழர்கள் வாழ்ந்து வந்த பகுதிகளில் மக்கள்தொகை மாற்றங்கள், நில அபகரிப்புகள் மற்றும் தமிழ் அடையாளத்தின் சிதைவு ஆகியவற்றிற்கு தொடர்ந்து வழிவகுத்து வருகிறது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான, பாராளுமன்றத்தில் முழுப்பெரும்பான்மையைக் கொண்ட தற்போதைய இலங்கை அரசாங்கம், இனப்பிரச்சினைகளைத் தீர்க்கும் போர்வையில் ஒரு புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தும் முயற்சிகளைத் துரிதப்படுத்தி வருகிறது.

இந்த முன்மொழியப்பட்ட கட்டமைப்பு மீண்டும் ஒரு ஒற்றையாட்சி "எக்கியராஜ்ய" (ஒற்றையாட்சி அரசு) மாதிரியை வலுப்படுத்துவதாகத் தெரிகிறது. இது அரசியல் சுயாட்சிக்கான தமிழர்களின் நியாயமான எண்ணங்களைப் புறக்கணித்து, அதன்மூலம் அவர்களை மேலும் ஓரங்கட்டி, அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இந்தச் சூழலில், 1985இல் இந்திய அரசால் பூட்டானில் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதிப் பேச்சுவார்த்தைகளின் போது, தமிழ்ப் பிரதிநிதிகளால் முன் வைக்கப்பட்ட திம்பு கோட்பாடுகளில் (Thimpu Principles) குறிப்பிடப்பட்டவற்றை தற்போது வலியுறுத்துவதாகவும், அந்த வகையில்,

- இலங்கைத் தமிழர்களுக்கான ஒரு தனித்துவமான தேசத்தை அங்கீகரித்தல் (தமிழர் தேசியம்)
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமாக ஏற்றுக் கொள்வது(தமிழர் தாயகம்)
- தமிழ்த் தேசத்திற்கான தன்னாட்சி உரிமையை உறுதிப்படுத்துதல் (தமிழர் தன்னாட்சி உரிமை) மற்றும்
- மலையகத் தமிழர்களுக்கான முழுக் குடியுரிமை உரிமைகள் உட்பட, அனைத்து குடிமக்களுக்கும் சமத்துவத்தையும், பாகுபாடின்மையையும் உறுதி செய்யும் ஒரு கூட்டாட்சி ஆட்சி முறையை நிறுவுதல்.

போன்றவற்றையே இந்தக் கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன.

இந்தக் கூறுகளை உள்ளடக்காமல் கொண்டு வரப்படும் எந்தவொரு புதிய அரசியலமைப்பும், அநீதி மற்றும் நிலையற்ற தன்மை தொடர வழிவகுக்கும்.

இது மீண்டும் மோதல்களுக்கும், மனிதாபிமான நெருக்கடிகளுக்கும் வழிவகுக்கும் அபாயத்தை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர், 1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் உட்பட, வரலாற்று ரீதியாக இலங்கையுடன் கொண்டுள்ள நட்புறவின் காரணமாக இலங்கையில் அமைதி மற்றும் நீதிக்காக நீண்டகாலமாக அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டிய தார்மீகக் கடமையை இந்தியா கொண்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் அவல நிலை, தமிழ்நாட்டில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இலட்சக்கணக்கான மக்கள், அங்குள்ளவர்களைத் தங்கள் உறவினர்களாகக் கருதுகின்றனர்.

இலங்கையில் வாழும் தமிழர்களின் நிலைமையில் ஏற்படும் எந்தவொரு சரிவும் இருதரப்பு உறவுகளுக்கும், இரு நாடுகளுக்கிடையேயான உறுதிப்பாட்டிற்கும் பெரியளவில் தாக்கங்களை ஏற்படுத்தும்.

இந்தச் சூழ்நிலையில், தமிழ் மக்களின் குறைகளை உண்மையாக நிவர்த்தி செய்யும் ஒரு அரசியலமைப்புச் செயல்முறையினைக் கொண்டு வருவதற்கு, இந்திய அரசாங்கம் இலங்கை அதிகாரிகளுடன் உயர் மட்ட அளவில் தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அக்கடிதத்தில் தமிழக முதல்வர் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

## கைகழுவி...

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் நீதிமன்றத்தினால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, அப்படுகொலை குறித்தும், செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் குறித்தும் தன்னிடம் கூறிய விடயங்களை உள்ளடக்கியும், இவ்விவகாரம் தொடர்பில் மீண்டும் சுயாதீன விசாரணையைக் கோரியும் அவரது மனைவியான எஸ்.சி.விஜேவிக்ரம கடந்த ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் திகதி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார்.

அதனையடுத்து இதுபற்றிய மேலதிக விபரங்களைக் கேட்டறியும் நோக்கில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி சோமரத்ன ராஜபக்ஷவை வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று சந்தித்த காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள், மீண்டும் இரண்டாம் கட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை சோமரத்ன ராஜபக்ஷவைச் சந்தித்தனர்.

இச்சந்திப்புத் தொடர்பில் தனது கணவரான சோமரத்ன ராஜபக்ஷ தன்னிடம் [illegible]

## மகளிர் பிரீமியர் லீக் தொடர்

# முதல் வெற்றியைப் பதிவு செய்த மும்பை இந்தியன்ஸ் அணி



மகளிர் பிரீமியர் லீக் ரி-20 கிரிக்கெட் போட்டியின் 3 ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை - டில்லி அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வென்ற டில்லி அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 195 ஓட்டங்கள் குவித்தது. நாட் ஸ்கீவர் பிரண்ட் 70 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். கப்டன் ஹர்மன்பிரீத் கவுர் அதிரடியாக ஆடி 42 பந்தில் 74 ஓட்டங்கள் குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதையடுத்து, 196 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டில்லி அணி களமிறங்கியது. தொடக்கம் முதலே சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் வீழ்ந்தன. சினேலி ஹென்றி தனி ஆளாகப் போராடி அரை சதம் கடந்தார். மற்றவர்கள் நிலைத்து நிற்கவில்லை. இறுதியில், டில்லி அணி 19 ஓவரில் 145 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

இதன்மூலம் 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணி தனது முதல் வெற்றியைப் பதிவு செய்தது. (3)

மனைவி எஸ்.சி.விஜேவிக்ரம தெரியப்படுத்திய விடயங்கள் வருமாறு,

யாழ்.செம்மணி மனிதப்படுகொலை தொடர்பான விபரங்களைக் கேட்டறியும் நோக்கில் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை (9) எனது கணவரை வெலிக்கடை சிறைச்சாலையில் சந்தித்தனர்.

அதன்படி அவ்வலுவலகத்தின் தலைவரினால் எனது கணவரிடம் கூறப்பட்ட விடயங்களின் பிரகாரம், காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினர் செம்மணிப் படுகொலை தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்ளாமல், காணாமல் போனோரில் சிலரது குடும்பங்களுக்கு இழப்பீட்டுத்தொகையை வழங்கி, அவ்விவகாரத்தை முடிவுக்குக்கொண்டுவந்து, சர்வதேச சமூகத்தின் மத்தியில் நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் அவப்பெயரை சீரமைப்பதற்கே அவர்கள் முயற்சிக்கின்றனர் என்ற விடயம் தெளிவாகப் புலப்பட்டதாக எனது கணவர் என்னிடம் கூறினார்.

செம்மணி மனிதப்புதைகுழி குறித்து 09.07.2025 அன்று எனது கணவர் சார்பில் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்ததுடன் 04.10.2025 அன்று இவ்விவகாரம் தொடர்பில் எனது கணவர் அவரது சட்டத்தரணி ஊடாக சத்தியக்கடதாசி ஒன்றையும் வழங்கியிருந்தார்.

அதில் அவர் 1996 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் தகவல்களை வெளிப்படுத்தியிருந்தார். ஆனால் அரசாங்கம் இவையனைத்தையும் புறந்தள்ளிவிட்டு, சொற்பளவானோருக்கு இழப்பீட்டை வழங்கி, இவ்விவகாரத்தைக் கைகழுவி விடுவதற்கு முயற்சிக்கின்றது எனக் குற்றஞ்சாட்டியுள்ளார். (ந-7)

## வடக்கு...

யோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோரின் தலைமையில் இப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட 450 மில்லியன் அமெரிக்க டொலர் அவசர நிதியுதவியில் இருந்து, இந்த முதற்கட்டப் புனரமைப்புப் பணிகளுக்காக 5 மில்லியன் அமெரிக்க டொலர் பயன்படுத்தப்படவுள்ளது.

இந்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான ரயில்வே கட்டுமான நிறுவனத்தினால் இப்பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வடக்கு ரயில் மார்க்கம் மஹவ முதல் ஓமந்தை வரை, ஓமந்தை முதல் யாழ்ப்பாணம் வரை, மதவாச்சி முதல் மன்னார் வரை என மூன்று கட்டங்களின் கீழ் புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## நாகை...

டித்வா புயலின் தாக்கம் தமிழகம் மட்டுமின்றி இலங்கையிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாகப் புயல் தாக்கத்தால் காங்கேசன் துறைமுகம் கடுமையாகச் சேதமடைந்தது.

பருவகால மழை காரணமாக நாகப்பட்டினத்தில் இருந்து காங்கேசன் துறை இடையிலான கப்பல் சேவை கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டது. இந்நிலையில் காங்கேசன் துறைமுக சீரமைப்புப் பணிகள் நிறைவு பெற்றுள்ளதையடுத்து நாகப்பட்டினம் - காங்கேசன்துறைக்கிடையில் கப்பல் சேவை மூன்றரை மாதங்களுக்குப் பின் எதிர்வரும் 18ஆம் திகதி மீண்டும் தொடங்கவுள்ளது.

அத்துடன் நாகப்பட்டினம் -காங்கேசன் துறை இடையிலான கப்பல் சேவையின்போது பயணிகள் அதிகம் பயணிக்கும் வகையில் புதிய கப்பல் ஒன்றும் இயக்கப்படும் என சுபம் கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது.(ந-7)

## ஐஸ்...

பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அராலிப் பகுதியைச் சேர்ந்த 19 மற்றும் 30 வயதான இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து ஐந்து கிராம் மற்றும் 39 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளுக்குப் பின்னர் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ந-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Institute of Junior

## Spoken & Written எலக்கியூசன் (Elocution)


### பரீட்சையில் 100 புள்ளிகளை பெற்ற 78 மாணவர்களைப் பாராட்டுகின்றோம்



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| P.அஷ்வின் | S.டிஷாரிகா | S.ஜிதுசியன் | S.சன்ஜிற்றா | P.அனன்யா | J.தியோனியஸ் | S.கனிஷ்யா | R.பிரணண்யா | S.சாதுரியா | K.ஷரத் |




| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A.அனந்திதா | G.சந்தோஷி | K.யதுஷ்னா | K.நதீஷா | A.ஆதனா | S.கருஷ்ணி | S.ஹர்ஷா | P.ஜஸ்வினி | S.ஜெனிஷா | S.டயனிகா |



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| P.ஹஸ்மிதா | B.மகிமா | R.வர்ணிக்கா | P.ரித்திகா | S.மிதுநாஷ் | R.ரிஷாந் | K.ஷிருஸ்ரிஹன் | T.ஸ்ரீகிருஷ்ணிகா | T.ஹர்சிஜன் | D.நற்றாலியா |



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| S.சிவனுஜா | S.பெனுஷ்கா | A.நிவின் | R.ஆத்விக் | R.வர்ணிகா | S.கிஷான்ராஜ் | N.கிருஷ்ணிகா | P.அக்ஷயா | T.ரோகித் | K.ருக்சானி |



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| R.கஷ்மிகா | J.ஸஷ்விகா | J.அகரன் | S.அக்ஷரா | A.அகல்விழி | A.அத்விகா | J.அஹாரா | G.பவனேஸ் | V.வைஷ்ணவின் | U.காருண்யா |



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| S.கனிஸ்ரிகா | J.அஷ்மிகா | N.இலக்கியா | S.சகீஷன் | T.கேசகி | K.வர்ஷா | K.ஹரிணி | S.கிருத்திக் | L.அன்றோனிக் | S.அத்விகா |



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| T.கஜலினி | P.ஆருக்ஷா | E.சுபீர்த்தனன் | M.பிரீத்திகா | V.தேஜஸ்ரீ | K.மித்ரா | R.அபிஷ்னா | R.அபிஷேக் | R.அபினாஷ் | L.கிறிஷிகா |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| M.சாகித் | R.பிரித்விக் | P.மானிஷா | J.சாகித்யன் | P.அகர்னீஷ் | S.ஆஷிகா |

D.மதுவர்ஷா

K.ஆதுலன்

**05.02.2026 இற்கு முன் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்**

**ஆசிரியர்-திருமதி.பிரகாஷ் சுமிதா**

- Elocution Classes எலக்கியூசன் வகுப்புக்கள் (Spoken & Written) 4 வயதிலிருந்து 14 வயதுவரை
- English Classes (ஆங்கில வகுப்புக்கள்) நேரடியாகவும் Zoom மூலமாகவும் நடைபெறும்

(1921)

**இல.925, பருத்தித்துறை வீதி, நல்லூர். (சட்டநாதர் கோயில் முன்) 077 199 9630**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் கலாசார மண்டபத்தில் இலவசக் கலை வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய, கலாசார கற்கைகள் நிறுவகத்தின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பயிற்சி நிலையம் ஊடாக, நாவலர் கலாசார மண்டபத்தில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அநிருத்தனனின் வழிகாட்டலுக்கமைவாக, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இலவசக் கலைவகுப்புகளை நடாத்தி வருகிறது.

இக்கலை வகுப்புகளின் புதிய பிரிவுகள், நாவலர் கலாசார மண்டபப் பொறுப்ப திகாரி, எஸ். உதயபாலன் மேற்பார்வையில் ஆரம் பமாகவுள்ளன.

அந்தவகையிலே ஆண், பெண் இரு பாலாருக்குமான யோகாசனம், மிருதங்கம், வயலின், கர்நாடக சங்கீதம் முதலான வகுப்புகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. மூன்று மாதகாலப் பயிற்சி நிறைவில், யோகாசனச் செயன்முறைப் பரீட்சையில் சித்தியெய்துபவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

வகுப்புகளில் இணைந்து கற்றுக்கொள்ள விரும்புபவர்கள் நேரடியாகவோ அல்லது 077 703 0587 எனும் தொலைபேசி எண்ணுடனோ தொடர்பினை ஏற்படுத்திப் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. (8)

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் சட்டநாதர் ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வுரையரங்கில் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் யாழ்.பல்கலைக்கழகத்தின் அரசறிவியற் துறையின் முதுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (8)

# மரம் முறிந்து விழுந்ததில் முச்சக்கரவண்டிகள் சேதம்




(கொழும்பு)


திருகோணமலை கந்தளாய் தள வைத்தியசாலைக்கு முன்பாக நின்றிருந்த ஒரு பாரிய மரம் திடீரென முறிந்து வீழ்ந்ததில், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டிகள் கடுமையாக சேதமடைந்துள்ளன.

வைத்தியசாலைக்கு வருகை தந்தவர்கள் மற்றும் நோயாளர்களை ஏற்றிச் செல்லும் நோக்கில் தரித்து நின்ற முச்சக்கர வண்டிகளே இவ்வாறு சேதமடைந்துள்ளன. அதிர்ஷ்டவசமாக இந்த விபத்தில் எவருக்கும் பாரிய காயங்களோ அல்லது உயிரிழப்புகளோ ஏற்படவில்லை.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8)



வரலாற்றுப் பழைமை வாய்ந்த பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான 54 ஆவது வருடாந்த பஜனை ஊர்வலம் நேற்றைய தினம் பக்தி பூர்வமாக இடம் பெற்றது. (படம்-சிவசாந்தன்)



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக மாணவ ஒன்றியம் சார்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை "மலையக தியாகிகள் தினம்" அனுஷ்டிக்கப்பட்டது. (படம்- சிவசாந்தன்)



வடக்கு- கிழக்கு மறுவாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் கம்பர்மலை பாரதி சனசமூக நிலையத்திற்கு அருகில் உள்ள அலவாஞ்சி கிணற்றடியில் நீர்த்தாங்கி ஒன்றினை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது. (படம்-மகாலிங்கம்)

கடந்த 10.12.2025 அன்று மறைந்த நெல்லியடிப் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் பத்மநாதன் ஜதர்சனின் நினைவாக குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் கரணவாய் மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்றது. (படம்- மகாலிங்கம்)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 700 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 1100 | 800 | 900 |
| தக்காளி | 600 | 600 | 700 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 250 | 200 |
| கோவா | 300 | 250 | 300 | 300 |
| கரட் | 500 | 330 | 600 | 450 |
| பூசணி | 150 | 150 | 150 | 150 |
| புடோல் | 300 | 300 | 200 | 300 |
| வாழைக்காய் | 150 | 140 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 800 | 700 | 400 | 1000 |
| வெண்டக்காய் | 400 | 250 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 250 | 260 | 250 | 320 |
| பயற்றங்காய் | 650 | 600 | 400 | 800 |
| லீக்ஸ் | 500 | 400 | 500 | 600 |
| பீற்றூட் | 800 | 650 | 1000 | 1000 |
| கறிமிளகாய் | 1000 | 1000 | 800 | 1000 |
| முருங்கைக்காய் | 0 | 0 | 1000 | 0 |
| போஞ்சி | 800 | 500 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 400 | 400 | 350 |
| கீரை - 1 பிடி | 100 | 70-140 | 150 | 140 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 200 | 150 | 120-180 |
| இராசவள்ளி | 600 | 600 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 800 | 600 | 500 | 800 |
| முள்ளங்கி | 200 | 200 | 200 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 80 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 100 |
| [illegible] | 150 | 150 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் 4 இல் ஒருவர் வறுமையால் பாதிப்பு

**(கொழும்பு)**

**நாட்டின் சனத்தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளதாக வறுமைப் பகுப்பாய்வு நிலையம் நடத்திய ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளதாக ODI Global நிறுவனத்தின் சிரேஷ்ட உறுப்பினர் கணேசன் விக்னராஜா தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் நிலவும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வறுமைப் பகுப்பாய்வு நிலையம் மற்றும் ODI Global நிறுவனத்தின் அனுசரணையில் சுயாதீனக் குழுவொன்றினால் தயாரிக்கப்பட்ட இலங்கையின் மாற்றத்தக்க பொருளாதார வளர்ச்சியைத் தக்கவைத்தல் எனும் அறிக்கை கொழும்பு மன்றக் கல்லூரியில், அண்மையில் வெளியிடப்பட்டது.

இந்தநிலையில், இலங்கையின் நெருக்கடிக்குப் பின்னரான மீட்சிக்கான கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகள் மற்றும் வறுமையைக் குறைப்பதில் கவனம் செலுத்தும் கொள்கைக் கட்டமைப்பு, இந்த அறிக்கையின் ஊடாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, அரசாங்கம் தலையிட்டு தனியார்த் துறையையும் இணைத்துக்கொண்டு ஒரு தேசியத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (8)



கிளிநொச்சி கொக்காவில் பகுதியில் கடந்த 09.01.2018 அன்று வாகன விபத்தில் உயிர்நீத்த ஜெயச்சந்திரன், அருண், கிருஷ்ணரூபன், சிந்துஜன் ஆகியோரின் நினைவு தினத்தை முன்னிட்டும் கடந்த காலங்களில் இளம் வயதில் உயிர் நீத்த உறவுகளின் நினைவாகவும் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரத்ததான முகாம் யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய மண்டபத்தில் இடம் பெற்றது. (படம் மகாலிங்கம்)

# வருமான இலக்கை கடந்தது இலங்கை தபால் திணைக்களம்

(கொழும்பு)

இலங்கை தபால் திணைக்களத்திற்குப் பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட கடந்த வருடத்திற்கான வருமான இலக்கை கடந்து அந்த திணைக்களம் மேலதிக வருமானத்தையும் பெற்றுள்ளது.

இதற்கமைய, கடந்த வருடத்தில் 13 ஆயிரத்து 100 மில்லியன் ரூபாய் வருமானத்தை ஈட்ட முடிந்ததாகத் தபால் மா அதிபர் ருவன் சத்குமார தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தினுள் இலங்கை தபால் திணைக்களம் சார்ந்த பல்வேறு பதவிகளுக்காகப் புதிய ஆட்சேர்ப்புகள் மற்றும் நிரந்தரப் பதவி உயர்வுகள் பல வழங்கப்பட்டுள்ளதாகவும் தபால் மா அதிபர் குறிப்பிட்டார்.

குறிப்பாக 2025 ஜூன் மாதத்தில் இலங்கை தபால் சேவையின் 378 உப தபால் அதிபர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கச் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்த நிரந்தர நியமனமானது 2020 ஆம் ஆண்டிற்குப் பின்னர் உப தபால் அதிபர்களுக்கு வழங்கப்பட்ட முதலாவது நிரந்தர நியமனமாகும் எனவும் தபால் மா அதிபர் ருவன் சத்குமார மேலும் சுட்டிக்காட்டினார். (8)

# நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு புதிய காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)

விதை நெல் உற்பத்தி பண்ணைகளின் காப்பீடுக்கான புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வேளாண்மை மற்றும் விவசாய காப்பீட்டு சபையின் தலைவர் பேமசிறி ஜசிங்காராச்சி தெரிவித்துள்ளார்.

அதன்படி, தற்போதைய நிலைமைகளை நிரவகிப்பதன் மூலம் விதை நெல் உற்பத்தி பண்ணைகளுக்கு வெற்றிகரமாக காப்பீடு செய்வதற்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



வேளாண்மை, கால்நடை, நிலங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சகத்தின் கீழ் உள்ள வேளாண்மை மற்றும் விவசாய காப்பீட்டு சபை இந்த காப்பீட்டுத் திட்டத்தை செயற்படுத்துகிறது.

இதற்கமைய, ஒரு ஏக்கர் விதை நெல்லுக்கு ரூபா 13 ஆயிரத்து 600 ரூபா காப்பீட்டுத் தொகை செலுத்தப்பட வேண்டும், பின்னர் பயிர் சேதம் ஏற்பட்டால் விவசாயிக்கு இழப்பீடாக ஏக்கருக்கு ரூபா 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வெள்ளம், வறட்சி, கட்டுப்படுத்த முடியாத நோய்கள், பூச்சிகள் உள்ளிட்ட அனைத்து இயற்கை நிலைமைகளாலும் ஏற்படும் பயிர் சேதம், காட்டு யானைகளால் ஏற்படும் பயிர் சேதம் ஆகியவை இந்த காப்பீட்டுத் திட்டத்தில் அடங்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (8)



# வீடுபேறு தரும் திருவாசகம் திருக்கோவை ஓதவாரீர்



**அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்**
**அகன்றது உதயம் நின் மலர்த் திருமுகத்தின்**
**கருணையின் சூரியன் எழ எழ: நயனக் கடிமலர் மலர**
**மற்றண்ணல் அங்கண்ணாம்**
**திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோ?**
**திருப்பெருந்துறையுறை சிவபெருமானே!**
**அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே! அலைகடலே!**
**பள்ளி எழுந்தருளாயே.**

இருள் நீங்கவும், அருட்செல்வத்தைக் கொடுக்கின்ற ஆனந்த மலையே! சூரியன் கீழ்த்திசையை நெருங்கி உதயஒளி பரவியது. திருப்பெருந்துறையுறை சிவபெருமானே! என நமது திருவுள்ளம் பற்ற! பள்ளி எழுந்தருள்வாயாக! சூரியனை வணங்குவோம். நம் உள்ளத்தில் மறைவு நீங்கி வெளிப்பட்டுத் தோன்ற, தினமும் அதிகாலை வணங்கி பாடப்படும் திருப்பள்ளியெழுச்சி.

**திருவாசகமும் திருக்கோவையும் திருநெல்வேலி சிவன் கோவிலில் வீடு பேறும் அமைதியான வாழ்வும் பெற்று உய்யவும் 13.01.2026 செவ்வாய்க்கிழமை ஓதுவோம் வாரீர்.**

மாணிக்கப் பெருமானுக்கு குருவாய் வந்து உபதேசத்தை அளித்து அதன்மூலம் உண்மையை உணர்த்தி "திருவாசகம்" பாடவும், "திருக்கோவை" பாடக் கட்டளை இட்டதும், அப் பாடல்களை தாம் கேட்டு மகிழ்ந்து ஏட்டில் எழுதியதும், தாமே கயிலாயத்தில் பாடித் தேவர்களுக்கு மாணிக்கவாசகர் புகழைக் காட்டிய, இம் மந்திர மொழிப் பனுவல்களை நாளும் ஓதி உய்வுபெற வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும். திருவாதவூரடிகள் புராணம் தரும் திருக்கோவையின் சிறப்பும்.

திருவாசகங்களை எல்லாம் கனகசபையிலே திருநடனஞ் செய்தருளுகின்ற சிவபெருமான் தமது சிவந்த அருமைத் திருக்கரத்தினாலே ஏட்டில் எழுதி முடித்த பின்னர் பேரன்பினாலே எதிர்காலத்திலுள்ள சைவர்கள் அனைவரும் ஓதித் தமது பிறவித் துன்பத்தினின்று நீங்குமாறு, சிவகாமியம்மை சமேதரராகிய சபாநாயகரைப் பாட்டுடைத் தலைவராக திருவருள் ஒருகோவை பாடுதல் வேண்டுமென்று அருளினார்.

எம்பெருமான் கட்டளைக்கு இசைந்து மனமுவந்து **"திருவளர் தாமரை"** எனத் தொடங்கும் 400 திருக்கோவை பாடியருள மாணிக்கவாசகர் முன்னே இருந்து எழுதி திருக்காப்புச் செய்தும், கனகசபையின் பஞ்சகிருத்திய நடனஞ்செய்யும் அழகிய திருச்சிற்றம்பலமுடையானது கையொப்பம் என்றும், பராயணம் செய்பவர்க்கு முத்தியைக் கொடுக்கவல்ல திருக்கோவையார் முடிவிடமாகிய **"ஊரன் மற்று யாவர்க்கும் ஊதியமே"** திருத்தமுற மைக்காப்புச் செய்தருளினார்.

**கருணையின் பெருமை கண்டேன் காண்க**
**புவனியின் சேவடி தீண்டினன் காண்க**
**சிவன் என யானும் தேறினன் காண்க**

(திருஅண்ட 60-63)

திருவாசகம் ஓதி இறையருள் கிடைத்து விட்டால் அறிவின் துணைக் கொண்டு பெறவேண்டியது அனைத்தும் தாமே வந்துவிடும்.

இந்தப் பிரசுரத்தை பிரதி எடுத்து மற்றவர்களிடமும் நம் சந்ததிக்கும் பகிர்ந்து நாம் எல்லோரும் நல்ல அருள் பெற்று உய்வோம்.



**க.கு.க சிவபாலன்**
**சிவநெறிப்புரவலர், பாஞ்சசண்யம்**

(c-4798)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘நோபல் பரிசை யாருக்கும் மாற்ற முடியாது’ மச்சாடோ கருத்துக்கு நோபல் நிறுவனம் அதிரடி!



(காரகாஸ்)

வெனிசுவேலா எதிர்க்கட்சித் தலைவி மரியா கொரினா மச்சாடோவுக்கு வழங்கப்பட்ட 2025 ஆம் ஆண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசை, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிற்கு மாற்றவோ அல்லது பகிரவோ முடியாது என நோர்வே நோபல் நிறுவனம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

வெனிசுவேலாவின் முன்னாள் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவையும் அவரது மனைவியையும் அமெரிக்கப் படைகள் அண்மையில் கைது செய்தன.

இந்த நடவடிக்கைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், தனக்குக் கிடைத்த நோபல் பரிசை ஜனாதிபதி ட்ரம்ப்பிற்கு வழங்க விரும்புவதாக மரியா கொரினா மச்சாடோ ஒரு நேர்காணலில் சூட்சுமமாக தெரிவித்தார். இது உலக அளவில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியது.

இந்த விவகாரம் தொடர்பாக நோர்வே நோபல் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒருமுறை அறிவிக்கப்பட்ட நோபல் பரிசை மற்றொருவருக்கு மாற்றவோ, பகிர்ந்துகொள்ளவோ அல்லது இரத்து செய்யவோ சட்டப்படி இடமில்லை.

நோபல் அறக்கட்டளையின் விதிகளின்படி, விருது குறித்த தீர்மானம் இறுதியானது மற்றும் நிலையானது. இதற்கு எதிராக மேல்முறையீடு செய்ய முடியாது.

விருது பெற்றவர்கள் அதன் பின்னர் செய்யும் செயல்கள் அல்லது அவர்கள் வெளியிடும் கருத்துகள் குறித்து நோபல் குழு எந்த வித விமர்சனமும் செய்யாது.

மச்சாடோவிடமிருந்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இந்தப் பரிசைப் பெறுவது தனக்குப் பெருமை அளிக்கும் எனத் தெரிவித்திருந்தார். அடுத்த வாரம் வோஷிங்டனில் இவர்கள் இருவரும் சந்திக்கத் திட்டமிட்டுள்ள நிலையில், நோபல் நிறுவனத்தின் இந்தத் தெளிவுபடுத்தல் முக்கியத்துவம் பெறுகிறது.

வெனிசுவேலாவில் ஜனநாயகத்தை மீட்டெடுக்கப் போராடியதற்காக மச்சாடோவுக்கு இந்த விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், நோபல் குழுவின் விதிகளின்படி அந்த கௌரவம் அவருக்கு மட்டுமே உரியது என்பது தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது. (3)

# உயிர்காக்கும் மருத்துவத்துறையை விட உயிர்களை பறிக்கும் இராணுவச் செலவீனம் அதிகரிப்பு!

## உலக சுகாதார ஸ்தாபனத் தலைவர் கவலை

உலக நாடுகள் உயிர்களைக் காக்கும் மருத்துவத்துறையை விட, உயிர்களைப் பறிக்கும் இராணுவ நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து வருவதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானம் கெப்ரியேசஸ் மிகுந்த கவலை வெளியிட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டில் உலக நாடுகளின் ஒட்டு மொத்த இராணுவச் செலவினம், முன்னெப்போதும் இல்லாத வகையில் 2.7 டிரில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.


போர்களைத் தீவிரப்படுத்துவதில் நாடுகள் காட்டும் ஆர்வம், அமைதியை ஏற்படுத்துவதில் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிதி நெருக்கடி குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் சில முக்கிய ஒப்பீடுகளைச் செய்துள்ளார்

அந்த வகையில் 150 நாடுகளில் பணியாற்றி வரும் உலக சுகாதார ஸ்தாபனத்திற்கு, ஒரு ஆண்டுக்கு மொத்தமாகவே 210 கோடி அமெரிக்க டொலர் மட்டுமே நிதியாகக் கிடைக்கிறது. ஆனால், உலக நாடுகள் இராணுவத்திற்காக இதே தொகையை ஒவ்வொரு 8 மணிநேரத்திற்கும் செலவிடுகின்றன.

அத்துடன் சுகாதார ஸ்தாபனத்தின் ஒரு வருட நிதி என்பது, அதிநவீன “ஸ்டீல் பாம்பர்” வகை போர் விமானம் ஒன்றின் விலைக்குச் சமமானது.

மேலும் புகையிலை நிறுவனங்கள் தங்களின் விளம்பரங்களுக்காகச் செலவிடும் தொகையில் நான்கில் ஒரு பங்கு மட்டுமே உலக சுகாதார ஸ்தாபனத்திற்கு நிதியாகக் கிடைக்கிறது.



“தற்போது உலகிற்குத் தேவையானது உயிர்களைப் பாதுகாப்பதில் பாரிய கவனம் செலுத்துவதே ஆகும்.

போர்களைத் தீவிரப்படுத்துவதை விட, அமைதியை நிலைநாட்டும் முயற்சிகளில் ஈடுபடுவதே மனிதகுலத்திற்குச் சிறந்த மருந்து.” என டெட்ரோஸ் அதானம் வலியுறுத்தியுள்ளார்.

உலகளாவிய சுகாதாரத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு பாரிய அளவில் வீழ்ச்சியடைந்து வருவது, எதிர்காலத்தில் பெரும் சுகாதார நெருக்கடிகளை உருவாக்கக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (3)

# ‘மக்கள் புரட்சியா
# உதவுவதற்கு தயார் நி
## ட்ரம்ப்

(வோஷிங்டன்)

**ஈரானில் பொருளாதார நெரு
விலைவாசி உயர்வு ஆகியவற்ற
நடைபெற்று வரும் நிலையில் ே
களுக்கு உதவ அமெரிக்கா தய
என அமெரிக்க ஜனாதிபதி டெ
தெரிவித்துள்ளார்**

மேற்காசிய நாடான ஈரானில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடியால், அத்தியாவசியப் பொருட்களின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளது. இதே போன்று வரலாறு காணாத வகையில், அமெரிக்க டொலருக்கு நிகரான ஈரான் நாணயமான ரியாலின் மதிப்பும் சரிந்துள்ளது. மத குரு அயதுல்லா கமேனி ஆட்சிக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன.

பாதுகாப்புப் படையினருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையேயான மோதல்களில், 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன் 2,600 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

ஈரான் முழுவதும் இணையச் சேவைகள் முடக்கப்பட்டு, தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதால் போராட்டத்தின் உண்மையான வீரியத்தை அறிவதில் சிக்கல் நீடிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், போராட்டக்காரர்களை “பயங்கரவாதிகள்” என ஈரானிய அரச ஊடகங்கள் சித்தரித்து வருகின்றன.

# தென் ஆபிரிக்கா கடற்
# சீனா, ரஷ்யா, ஈரான் கூட்

தென் ஆபிரிக்க கடற்பரப்பில் சீனா, ரஷ்யா மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் ஒரு வார கால கூட்டு கடற்படை பயிற்சிகள் நேற்று ஆரம்பமாகின.

“BRICS Plus” நாடுகளின் ஒத்துழைப்புடன் நடைபெறும் இந்தப் பயிற்சியானது, கடல்சார் போக்குவரத்து மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய பிரிக்ஸ் அமைப்பானது, தற்போது மேலும் பல நாடுகளை உள்வாங்கி “BRICS Plus” ஆக விரிவடைந்துள்ளது.

அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் பொருளாதார ஆதிக்கத்திற்கு மாற்றீடாகப் பார்க்கப்படும் இந்தக் கூட்டணியில் எகிப்து, இந்தோனேசியா, சவூதி அரேபியா, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளும் அங்கம் வகிக்கின்றன.

இந்நிலையில், இந்த கூட்டுப் பயிற்சியில் ஆரம்ப விழாவில் பிரேசில், எகிப்து மற்றும் எத்தியோப்பியா ஆகிய நாடுகள் கண்காணிப்பாளர்களாகப் பங்கேற்றன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்துக்கும்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ல் பற்றி எரிகிறது ஈரான்'
## லையில் அமெரிக்கா!
### அறிவிப்பு

நக்கடி மற்றும்
ால் போராட்டம்
போராட்டக்காரர்
யாராக உள்ளது
டானால்ட் ட்ரம்ப்



இதனிடையே, ஈரானின் பிரதம நீதியரசர் மொஹமட் முவஹெதி ஆசாத் விடுத்துள்ள எச்சரிக்கை நிலைமையை மேலும் பதற்ற மடையச் செய்துள்ளது.

போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் அவர்களுக்கு உதவுபவர்கள் அனைவரும் "இறைவனின் எதிரிகள்" எனக் கருதப்படுவார்கள் என்று அவர் அறிவித்துள்ளார்.

ஈரானிய சட்டப்படி இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட வாய்ப்புள்ளது.

இதேவேளை, ஈரான் மக்களின் போராட்டங்களுக்குத் தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தனது ட்ரூத் சோஷியல் தளத்தில், "ஈரான் முன்னெப்போதும் இல்லாத வகையில் விடுதலையை எதிர்நோக்கியுள்ளது.

அவர்களுக்கு உதவ அமெரிக்கா தயாராக உள்ளது" எனப் பதிவிட்டுள்ளார்.

போராட்டக்காரர்கள் மீது ஈரான் அரசாங்கம் நடத்தும் ஒடுக்குமுறைக்குத் தகுந்த பதிலடி கொடுக்கும் வகையில், ஈரான் மீது இராணுவத் தாக்குதல்களை நடத்துவது குறித்து ட்ரம்ப் தனது அதிகாரிகளுடன் ஆலோசித்து வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

தெஹ்ரானில் உள்ள இராணுவம் அல்லாத முக்கிய இடங்கள் மீது தாக்குதல் நடத்துவது உள்ளிட்ட பல விருப்பத் தெரிவுகள் ட்ரம்ப்பிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரானில் நிலவும் இந்த அசாதாரணச் சூழல் காரணமாக மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் பெரும் போர் மேகங்கள் சூழ்ந்துள்ளன. (3)

## கனேடிய பி.ஜி.பி விசாத்திட்டம்
## தற்காலிகமாக நிறுத்தம்

(ஒட்டாவா)

கனடாவில் வசிக்கும் நிரந்தரக் குடியிருப்பாளர்கள் மற்றும் குடிமக்கள், தங்கள் பெற்றோர் மற்றும் தாத்தா-பாட்டிகளை அனுசரணை செய்து நிரந்தரமாக தம்முடன் அழைத்து வருவதற்கான 'Parents and Grand parents Program' (PGP) திட்டத்தில் புதிய விண்ணப்பங்களை ஏற்பதை கனடா அரசாங்கம் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

இந்த தகவலை இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ளது.

குடியேற்ற அமைப்பைச் சீரமைக்கவும், சமநிலையான நடைமுறைகளை உருவாக்கவும் இந்த அதிரடி முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

அந்த வகையில் இனி வரும் காலங்களில் இந்த திட்டத்தின் கீழ் புதிய விண்ணப்பங்கள் ஏற்கப்படாது என்பதுடன் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டு, பரிசீலனையில் உள்ள விண்ணப்பங்களின் செயல் முறைகள் வழக்கம் போலத் தொடரும்.

குடியேற்ற அமைப்பில் நீடித்த நிலைத்தன்மையை உருவாக்கவும், திட்டத்தை மறுசீரமைக்கவும் இந்த இடைவெளி தேவைப்படுவதாக கனேடிய அரசாங்கம் விளக்கம் அளித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான குடும்பங்களை ஒன்றிணைக்க உதவிய இந்த PGP திட்டம், சமீபகாலமாக விண்ணப்பங்களின் எண்ணிக்கை அளவுக்கு அதிகமாக உயர்ந்ததால் கடும் நெருக்கடியைச் சந்தித்தது.

இதனால் விண்ணப்பங்களைச் செயற்படுத்தும் கால அவகாசம் அதிகரித்ததுடன் நிர்வாகச் சிக்கல்களும் உருவாகின.

இதேவேளை, கனேடிய அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு குறித்து, கருத்துரைத்துள்ள குடியேற்ற ஆலோசகர்கள், "இந்த முடிவு தங்கள் அன்புக்குரியவர்களை அழைத்து வரக் காத்திருக்கும் பல குடும்பங்களுக்கு பெரும் மன அழுத்தத்தையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தும்," என கவலை தெரிவித்துள்ளனர். (3)

## பரப்பில்
## டுப்பயிற்சி



பிரிக்ஸ் உறுப்பு நாடுகளுக்கும் இடையே முறுகல் நிலை அதிகரித்துள்ள சூழலில் இந்தப் பயிற்சி நடைபெறுகிறது.

பிரிக்ஸ் நாடுகள் அமெரிக்காவுக்கு எதிரான கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாகக் குற்றம் சாட்டியுள்ள ட்ரம்ப், அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் மேலதிகமாக 10 சதவீத வர்த்தக வரியை விதிப்பதாக எச்சரித்திருந்தார்.

எவ்வாறாயினும், "அமைதிக்கான விருப்பம் 2026" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் பயிற்சியானது, அரசியல் நோக்கங்களைக் கொண்டது அல்ல எனவும், அமெரிக்காவுக்கு எதிரான விரோதப் போக்கு இதில் இல்லை எனவும் தென் ஆபிரிக்க இராணுவம் விளக்கமளித்துள்ளது. (3)

## வெனிசுவேலாவில் வலுக்கும் பதற்றம்



## அமெரிக்கர்களை உடனடியாக வெளியேறுமாறு அறிவிப்பு!

(காரகாஸ்)

வெனிசுவேலாவில் உள்ள அமெரிக்கர்கள் உடனடியாக அந்நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என அமெரிக்க அரசு புதிய பாதுகாப்பு எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு நிலை மோசமடைந்துள்ளதையும், அவசர உதவி வழங்க அமெரிக்க அரசால் இயலாத நிலையையும் காரணமாக வைத்து அந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அறிவிப்பில், "வெனிசுவேலாவில் உள்ள அமெரிக்க குடிமக்கள் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டும்" என்று காரகாஸ் அமெரிக்க தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

இந்த எச்சரிக்கை, வெனிசுவேலா சாலைகளில் ஆயுதம் தாங்கிய குழுக்கள் செயற்படுவதாக வந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விடுக்கப்பட்டுள்ளது.

கொலெக்டிவோஸ் என அழைக்கப்படும் ஆயுதம் தாங்கிய மிலீஷியா குழுக்கள் சாலைகளில் தடுப்புகளை அமைத்து, வாகனங்களை நிறுத்தி, அமெரிக்க குடியுரிமை அல்லது அமெரிக்காவுக்கு ஆதரவு உள்ளதற்கான ஆதாரங்களைத் தேடி சோதனை நடத்துகின்றன என காரகாஸ் அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் சர்வதேச விமானங்கள் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளதால், வெனிசுவேலாவில் உள்ள அமெரிக்கர்கள் உட னடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என தூதரகம் தெரிவித்துள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன இலக்கத் தகடுகளை வழங்க புதிய நிறுவனத்துடன் ஒப்பந்தம்



(கொழும்பு)

இலங்கையின் புதிய வாகன இலக்கத் தகடுகளைத் தயாரிப்பதற்காக நீண்டகாலமாகத் தாமதமடைந்து வந்த ஒப்பந்தம், எதிர்வரும் வாரத்தில் சவுத் ஏசியன் டெக்னோலோஜிஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட வாய்ப்புள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்தார். தற்போது நிலுவையிலுள்ள இலக்கத் தகடுகளின் எண்ணிக்கை 2 இலட்சத்தையும் தாண்டியுள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டுள்ள போதிலும், ஒப்பந்தம் இன்னும் உத்தியோகப்பூர்வமாக இறுதி செய்யப்படவில்லை.

எனினும், அதன் பணிகள் தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளதாக ஆணையாளர் குறிப்பிட்டார்.

உந்துருளிகள், சிற்றூந்துகள், முச்சக்கர வண்டிகள் மற்றும் மின்சார வாகனங்கள் உட்பட 2 இலட்சத்திற்கும் அதிகமான வாகனங்கள் நிரந்தர இலக்கத் தகடுகள் இன்றி காத்திருக்கின்றன.

தினசரி பதிவாகும் புதிய வாகனங்களால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1994- RC
நட்சத்திரம்: ரேவதி
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:LLB, Banker
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/13181

பிறப்பு: 1993-இந்து
நட்சத்திரம்:சுவாதி
7இல் செவ்
கி-பா: 62
உயரம்:5'8"
தகைமை/தொழில்-Business(own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14618

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:சுவாதி
7இல் செவ்
கி-பா: 62
உயரம்:5'8"
தகைமை/தொழில்:A/L, Time Keeper
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14674

பிறப்பு: 1991- இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி-பா: 6 3/4 உயரம்: 5'7"
தகைமை/தொழில்: AIB, Bank Assistant
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14696

பிறப்பு:1989- இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா : 26
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L, Police Officer
எதிர்பார்ப்பு - தகுதியான பெண்
தொ.இ: B/15066

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1996-இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
கி-பா: 14 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSC, MBA, Reseacher(NGO)
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/12936

பிறப்பு: 2000 - NRC
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Management, HRM,HNDA
எதிர்பார்ப்பு - வெளிநாடு
தொ.இ: G/15314

பிறப்பு: 1995-இந்து
நட்சத்திரம்: பரணி
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Account Course
எதிர்பார்ப்பு:வெளிநாடு,தொழில்
தொ.இ: G/15565

பிறப்பு: 1986 - இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
1 இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, Nurse
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/15568

பிறப்பு: 1991-இந்து
நட்சத்திரம்-சதயம்
கி.பா: 8 ¼ உயரம்-5'8"
தகைமை/தொழில்: BBA, Executive Officer
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/15480

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 518

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## விடுதலை

சுதந்திரப் போராட்ட வீரன் ஒரு காட்டு வழியாகத் தனியாகப் போய்க்கொண்டிருந்தான். இருட்டிப் போய்விட்டது. என்ன செய்வது என்று பார்த்தான்.

அங்கே ஒரு சத்திரம் தெரிஞ்சது. "சரி இன்றைக்கு இரவு இங்கேயே தங்கி இருந்துவிட்டுக் காலையிலே போகலாம்" என்று முடிவு செய்து கொண்டான்.

நேராகப் போனான்.... அங்கே தங்கிக்கொண்டான். படுத்திருக்கிறான். சரியாகத் தூக்கம் வரவில்லை. ஏதோ சத்தம். மேலே பார்க்கிறான். அங்கே ஒரு கிளிக்கூடு தொங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் கூட்டுக்குள்ளே ஒரு கிளி. கூட்டுக்குள்ளே அடைக்கப்பட்ட கிளி உள்ளே இருந்து கொண்டே சுதந்திரம் -சுதந்திரம் என்று கத்திக் கொண்டிருக்கிறது.

இவன் அதைப் பார்க்கிறான்! இவனுக்கு மனசு என்னமோ மாதிரி ஆகிவிட்டது. ஐயோ பாவம் இந்தக் கிளியை இப்படிக் கூட்டுக்குள்ளே அடைத்துப் போட்டிருக்கிறார்களே.

அதன் மனம் இப்போது என்ன பாடுபடும். விடுதலை அடையுறதிலே அதற்கு எவ்வளவு ஆசை. அது தான் சுதந்திரம்-சுதந்திரம் என்று அதே வார்த்தையைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

இவனுக்கு, தான் சிறையிலே இருந்த நாட்களெல்லாம் ஞாபகத்துக்கு வந்தது. அவனுக்குத் தெரியும் அடைபட்டிருக்கிறது எவ்வளவு கொடுமை என்று. அந்தக் கிளியினது நிலைமையும் அப்படித் தான் என்பதை நினைத்துப் பார்த்தான். ரொம்பவும் உணர்ச்சிவசப்பட்டான். உடனே ஒரு முடிவுக்கு வந்தான்.

சரி இந்தக் கூட்டுக்கிளிக்கு நாம் சுதந்திரம் வாங்கிக் கொடுப்போம். இந்தச் சத்திரத்து உரிமையாளருக்குத் தெரியாமல் அந்தக்கூட்டைத திறந்து விடுவோம் என்று நினைத்தான். மெதுவாக எழுந்து அந்தக் கூட்டைத் திறந்துவிட்டான்.

உள்ளேயே உட்கார்ந்து பழக்கப்பட்ட கிளி, கூட்டிற்குள்ளேயே இருந்தது. அதைத் தூக்கிக் கொண்டு வெளியிலே வந்தான். அதனைப் பறக்க விட்டுவிட்டு உள்ளே வந்தான்..

இப்போது அவனுக்கு நிம்மதியாக தூக்கம் வந்தது... கிளிக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்துட்டானே... அதனாலே!

பொழுது விடிந்தது. காலையிலே இந்த வீரன் நிம்மதியாக கண்விழித்துப் பார்க்கிறான். அவனுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி.

மேலே தொங்கிக் கொண்டிருந்த கூட்டைப் பார்க்கிறான் அந்தக் கூட்டுக் கதவு திறந்தபடியே இருந்தது. இரவு வெளியிலே கொண்டு போய்விட்ட கிளி மறுபடியும் கூட்டுக்குள்ளே வந்து உட்கார்ந்து சுதந்திரம் சுதந்திரம் என்று கத்திக் கொண்டிருந்தது.

இவன் இப்பதான் உண்மையைப் புரிந்து கொள்கின்றான்.

அந்தக்கிளி சுதந்திரம் சுதந்திரம் என்று கத்திக் கொண்டிருந்தது உண்மை. ஆனால் அந்த வார்த்தையின் அர்த்தம் தெரியாமல் அது கத்திக்கொண்டிருக்கிறது.

ஏதோ பழக்க தோஷத்திலே அது அப்படிகத்திக் கொண்டு இருந்திருக்குது. அவ்வளவுதான்.

எதுக்கு இந்தக் கதையைச் சொல்கிறேன் என்றால், இன்றைக்கு நம்மிலே பலபேர் கூட அந்த வார்த்தையை அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறோம். அன்றைக்கு ஒருநாள் ஆகஸ்ட் மாதத்திலே அந்நியர்களை வெளியேறச்சொன்னோம்! (08-08-1942). அதேமாதிரி இன்னொரு ஆகஸ்ட் மாதத்திலே அவர்கள் போய்விட்டார்கள். (15-8-1947) அந்நிய மனோபாவம் நம்மிடமிருந்து வெளியேறிவிட்டதா என்பதை யோசிக்க வேண்டிய நேரம் இது!

அது போனால்தானே நாம் நாமாக வாழ முடியும்! விடுதலையின் அர்த்தம் புரியாமலே அதைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறதாலே என்ன பிரயோஜனம்? நமக்கு விடுதலை கிடைத்த சமயத்திலே டாக்டர் இராதா கிருஷ்ணன் என்ன சொன்னார் தெரியுமா? "இன்று இரவு நமக்குச் சுதத்திரம் கிடைக்கப் போகிறது. நாளையிலேயிருந்து நாம் செய்கிற தவறுகளுக்கு ஆங்கிலேயர்கள் மீது பழிபோட முடியாது என்றார். எதிர்காலம் நல்லவிதமாக இருப்பது நமது கையிலே தான் என்று சொன்னார். ஒரு புகழ்பெற்ற விஞ்ஞானி நாட்டின் எதிர்காலம் பற்றி ஒரு கூட்டத்திலே பேசிக்கொண்டிருந்தார். உங்களிடம் சொல்வதற்கு என்னிடம் ஒரு நல்ல செய்தியும் ஒரு கெட்ட செய்தியும் இருக்கிறது. கி.பி 2000 இற்குப் பிறகு நாமெல்லாம் கழிவுநீரைப் பதப்படுத்தித்தான் குடிக்க வேண்டியிருக்கும்! என்றார்.

சரி நல்ல செய்தி என்ன? அதைச் சொல்லுங்க என்றார்.

நான் இப்போது சொன்னதுதான் நல்ல செய்தி.

கெட்ட செய்தி என்ன என்றால் அப்போது, குடிநீராக சுத்தம் செய்ய போதுமான அளவுக்குக் கழிவுநீர் கிடைக்குமா? என்பதுதான் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## இரைப்பைப் புண், குடற்புண்ணிற்கு உணவுத்தேர்வு



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

மேற்படி நிலைமைகளில் எப்படியான உணவுகளைத் தேர்வு செய்வதன் மூலம் இரைப் பைப் புண், குடற் புண்களைத் தவிர்க்க அல்லது குறைக்க முடியும் என ஆராய்வோம்.


காலை எழுந்தது முதல் இரவு உறக்கத்திற்கு செல்வது வரையான உணவு முறைகள் அவசியம். மேற்படி நிலைமையில் பாதிக்கப்பட்டவர்கள் இரண்டு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை ஏதாவது ஒரு திட உணவு அல்லது திரவ உணவுகளை எடுத்துக் கொள்வது அவசியம்.

பொதுவாக அல்சர் இருப்பவர்களுக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்படும். ஏனெனில் வயிறு உப்பிசமாகவும் பசியின்மையாகவும் இருப்பதனால் அவர்களால் உணவு உட் கொள்ள முடியாமல் நாட்களைக் கழித்துக் கொண்டிருப்பார்கள். இந்தப் பழக்கம் மிகவும் தவறானது. காலை எழுந்தவுடன் 100 மில்லி அளவு தண்ணீர் குடிக்கலாம் அல்லது வில்வம் இலை களை ஊற வைத்து வடித்த நீராகவும் அருந்தலாம். அதன் பிறகு மூன்று விதத் திரவ ஆகாரங் களில் ஏதாவது ஒன்றை எடுக்கலாம்.

அதில், முதலாவது பழஞ் சோற்று நீர் அல்லது நீராகாரம். அதாவது குத்தரிசி சோற்றில் இரவு நீர் ஊற்றி பிசைந்து காலையில் குடிப்பதே ஆகும். இதில் 100 மில்லி அளவு குடிக்கலாம். இரண்டாவது தேர்வு வெண் பூசணிச்சாறு 20-30 மில்லி வரை எடுக்கலாம். மூன்றாவது தேர்வு அறுகம் புல் சாறு. இம் மூன்றில் ஏதாவது ஒன்றை தினம் அருந்தலாம். இவ் உணவுதான் Break fast ஆக கருதப்படும். அதாவது காலை உணவு வேறு. Break fast வேறு. அதாவது Break fast என்பது இரவு முழுவதும் உணவு உட்கொள்ளாமல் இருந்து காலையில் அதை நிறுத்தும் உணவு Break fast ஆக கருதப்படும்.

மேற் கூறிய மூன்றில் ஏதாவது ஒரு திரவ உணவுடன் ஆரம்பிப்பது அல்சர் நோயாளிகளுக்கு ஒரு சிறந்த தொடக்க நாளாக அமையும்.

காலை 6 மணிக்கு எழுந்து மேற்படி திரவ ஆகாரத்தை எடுத்



தால், காலை 8.00 மணி க்கு உங்கள் காலை உணவை எடுக்க வேண்டும். அதாவது இரண்டு மணி நேரத்திற்குள் காலை உணவை எடுக்க வேண் டும்.

அதாவது, Break fast ஆக திரவ உணவுகளில் ஏதாவது ஒன்றை எடுக்க முடியாவிட்டால் காய்கறிகளை அரை வேக்காடாக அவிய வைத்து சிறிது உப்பு சேர்த்து அவிக்கலாம். இவற்றையாவது எடுத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து 8 மணிக்கு காலை உணவை எடுத்துக் கொள்வது அவசியம். இதில் இடியப்பம், இட்லி, சாதம் பயன்படுத்தலாம். சாம்பாறு , சொதி போன்றவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

காரம், மசாலா கலக்காத கறி வகைகளாக இருக்க வேண்டும். அதாவது மென்மையான உணவாக இருக்க வேண்டும். இட்லி மா புளிக்காமல் இருக்க வேண்டும்.அதாவது சரியான உணவை சரியான நேரத்தில் அல்சர் நோயாளிகள் எடுத்துக் கொள்ள வேண்டும். Right Food in Right Time. சரியான உணவை தவறான நேரத்தில் எடுத்தாலும், சரியான நேரத்தில் தவறான உணவை எடுத்தாலும் அல்சர் குறையாமல், ஏன் குணமாகாமல் கூட போகலாம். ஏனெனில், காலை உணவு எப்போதும் எமது உடலிற்கு உயிர் ஆற்றலைக் கொடுக்கும் உணவாகும். எனவே, புளித்த (Fermented) உணவுகள் அசிடிற்றியைக் கூட்டலாம். ஜீரணக் குறைபாட்டையும் ஏற்படுத்தலாம். காலை உணவாக ரவை, உப்பு மாவையும் பயன்ப டுத்தலாம். குறிப்பாக, சாமை அரிசிச்சாதம் அல்சர் நோயா ளிகளிற்கு காலை உணவிற்கு சிறந்தது. சாமையரிசிச் சாதம் இலகுவாகச் சமிபாடடையும். அத்துடன் உடலிற்கு ஆற்ற லையும் கொடுக்கும். அதாவது, காபோவைதரேற் றும் மற்றும் இணை சத்துக்களும் கிடைக்கக் கூடியதாக இருக்கும். இத னுடன் சேரும் சாம்பாரு, சட்னி வகைகளில் காரம் அதிகம் இல்லாமலும் மசாலா சேர்க் காமலும் 3 மாதங்கள் தொடர்ச் சியாக கடைப்பிடித்து வர சிறந்த பலனைக் கொடுக்கும். அடுத்து 11 மணியில் இருந்து 11.30 மணிக்குள் ஏதாவது சிறிய உணவு ஒன்றை எடுக்க வேண்டும். ஏனெனில், இரைப்பையில் மதிய உணவிற்காக அமிலச் சுரப்பு நிகழும்.

இந்த வேளையில் வேக வைத்த ஏதாவது ஒரு காய்கறி அத்துடன் அத்திப்பழம், மாதுளை, சப்போட்டா, கறுப்பு திராட்சை, பொட்டுக்கடலை 1 தேக்கரண்டி, ஒரு பேரிச்சம் பழம் இவற்றிலொன்றையும் சேர்த் துக் கொள்ளும் போது அசிடிற்றியின் தாக்கத்தைக் குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். மதிய உணவு 1 மணிக்கு எடுக்க வேண்டும்.

மதிய உணவில் சாதம் புளிக்காத தயிர்ச்சாதம், மோர், மோர் குழம்பு காரம் அதிகம் இல்லாமல் அதாவது புளிப்புச் சுவையைத் தவிர்க்க வேண்டும். இரசம், தக்காளி தவிர்ப்பது அல்லது குறைவாக எடுக்க வேண்டும். அதாவது, மதிய உணவு காரமில்லாமல் நேரத்திற்கு எடுக்க வேண்டும். அதாவது 2 மணிக்குள் மதிய உணவை எடுத்து விட வேண்டும். பின்பு மதிய உணவிற்கும் இரவு உணவிற்கும் இடைப் பட்ட நேரத்தில் அதாவது, மாலை 4 மணி முதல் 4.30 மணிக்குள் 2 தேக்க ரண்டி அளவு பொட்டுக் கடலை அல்லது ஏதாவது ஒரு பழம் அல்லது ஏதாவது ஒரு காய்கறி எடுத்துக் கொள்ளலாம். அதாவது காலையில் பழம், நட்ஸ் வகை., காய்கறி எதை தெரிவு செய்கிறீர்களோ மாலையில் மாறி எடுத்துக் கொள்ளலாம். இரவு உணவு 9.00 மணிக்கு முன்பு கட்டாயமாக சாப்பிட வேண்டும். ஏனெனில் எமது உடம்பில் இரைக்காக இரைப்பை என்ற ஒரு பகுதி உண்டு. அதற்கு சரியான தீனீ சரியான நேரத்தில் கிடைக்காவிட்டால் இரைப் பைப் புண் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். அல்சர் நோயாளிகளுக்கு ஏற்கனவே இருக்கும் புண் அதிகமாகாமலும் தவிர்த்துக் கொள்ள முடியும். இரவில் இலகுவில் சமிபாடு அடையக் கூடிய இடியப்பம், புளிக்காத இட்லி போன்றவற்றை சாப்பிடலாம். மொத்தத்தில் SPICY இல்லாத உணவாக இருக்க வேண்டும். முக்கியமாக வீட் டில் தயாரிக்கப்பட்ட உணவாக இருக்க வேண்டும். முக்கியமாக அல்ககோல், புகைப் பிடித்தல், மசாலாக் கலவைகள் சேர்ந்த அசைவ உணவு களை முற்றிலும் தவிர்க்க வேண்டும். காலை 10 மணி திரவ உணவில் முட்டைக்கோவா யூஸீம் எடுத்துக் கொள்ளலாம். இல்லாது உணவு முறைகளை மூன்று மாதங்கள் இடை விடாமல் கடைப்பிடிக்கும் போது சிறந்த பலனைப் பெற்றுக் கொள்ளலாம்.

# இராசிபலன்

12.01.2026
மார்கழி 28, திங்கட்கிழமை
நவமி பிற்பகல் 3.31 மணி வரை

சுவாதி முன்னிரவு 11.39 மணி வரை
சுப நேரம் 12.33 - 2.03 மணிவரை
இராகுகாலம் 8.03-9.33 மணிவரை

சந்திராஷ்டமம்:
உத்தரட்டாதி, ரேவதி

வளவன்




வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.




புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், கல்யானக் கனவுகள் நனவாகலாம்.




எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்று செய்து முடிப்பீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.




தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர்.




தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.




தொழில் முயற்சிகளில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், புண்ணிய காரியங்களுக்கு செலவிட்டு மகிழ்வீர்கள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.




வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வுடன் நடந்து கொள்வது நல்லது.




பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், தொழில் போட்டிகள் மாறும், வர வேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.




இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.




உடன் பிறப்புக்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

மிகப் பெரிய மனிதர்கள் வாழ்வில் எளிமையைக் கடைப்பிடிப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 952



அத்துடன் மலையமான் காரிக்குப் படைபலம் அதி கமாயிருந்தது. மலைய மான், கொல்லி மலைமீது படை எடுத்துச் சென்று வல்வில் ஓரி யைக் கொன்று அவனுடைய மலைக் கோட்டையையும் நிர்மூலமாக் கினான்.

அதே காலத்தில் கொல்லி மலையை அடுத் திருந்த நிலப் பகுதியில் அதியமான் நெடுமா னஞ்சி என்னும் குறுநில மன்னன் அரசு புரிந்து வந்தான். வல்வில் ஓரியுடன் அவன் உறவு பூண்டவன். வல்வில் ஓரியைக் கொன்ற மலை யமான்காரியை அவன் பழி வாங்க விரும்பி னான். தன்னால் மட்டும் அது முடியாதென்று எண்ணிச் சோழ மன்னனாகிய கிள்ளி வளவனின் உதவியை நாடி னான். மலையமானின் வலிமை அதிக மாகி வருவது பற்றியும் அவன் சேரனோடு தோழமை கொண்டிருப்பது பற்றியும் கிள்ளி வளவனுக்குக் கோபம் இருந்தது. எனவே சோழன் கிள்ளி வள வனும் தகடூர் அதிய மானும் சேர்ந்து திருக் கோவலூர் மலையமானைத் தாக்கினார்கள். மலையமான் போர்க்களத்தில் வீர சொர்க்கம் எய்தினான். மலையமானு டைய இரு இளம் புதல்வர் களைச் சோழ நாட்டு வீரர்கள் சிறைப்பிடித்து வந்தார்கள். மலையமானுடைய வம்சத் தையே அழித்துவிட வேண்டு மென்று கருதியிருந்த அதிய மானும் கிள்ளிவளவனும் அந் தக் குழந்தைகளைப் பூமியில் கழுத்தளவு புதைத்து யானைக் காலால் இடறிக் கொல்லும்படி கட்டளையிட்டார்கள்.

மலைய மானுடைய வள்ளன் மையை அறிந்து, அதனால் பயன் துய்த் திருந்த புலவர் ஒருவர் அச் சமயம் அங்கு வந்து சேர்ந்தார். மலையமானுடைய குழந்தை களின் உயிருக்காகச் சோழ மன்னனிடம் மன்றாடினார்.

“வேந்தே! அதோ பார்! கழுத்து வரை புதைக்கப் பட்டிருக்கும் குழந்தைகளின் முகங்களைப் பார்! அந்த முகங்களில் தவழும் புன்ன கையைப் பார்! தங்களைக் காலால் இடறிக் கொல்லப் போகிற யானையைப் பார்த்து, அதன் துதிக்கை ஆடு வதைப் பார்த்து, அக்குழந் தைகள் ஏதோ வேடிக்கை என்று எண்ணிச் சிரிக்கின் றன. இத் தகைய குற்றமற்ற குழந்தை களையா கொல்லப் போகி றாய்? அந்தக் குழந் தைகள் என்ன பாவம் செய் தன? தகப் பன் செய்த குற்றத் துக்காகக் குழந்தை களைத் தண்டிக் கலாமா?” என்றார் புலவர். அதைக் கேட்ட சோழன் மனமாற்றம் அடைந்தான். தன் கட்டளையை உடனே மாற்றினான். குழந்தைக ளைத் தரையிலிருந்து எடுக் கச் செய்தான்.

வயது வந்த பிறகு அவர்களில் மூத்த பிள்ளைக்குத் திருக்கோ வலூர் அரசையும் திரும்பக் கொடுத்தான்.

அது முதல் நூற்றாண்டு நூற்றாண்டாகச் சோழ குலத்து மன்னர்களிடம் திருக் கோவலூர் மலையமான் வம்சத்தினர் நன்றியுடன் நட்புரிமை கொண்டிருந்தார் கள். அந்த உறவு சுந்தர சோழர் காலம் வரை யில் நீடித்திருந் தது. மலை யமான் மகளாகிய வானமா தேவியைச் சுந்தர சோழர் மணந்துபட்ட மகிஷி யாகக் கொண்டிருந்தார்.

கொல்லி மலை வல்வில் ஓரி தகடூர் அதியமான் இவர்களு டைய வம்சத்தினர் அழிக் கப்பட்டனர். ஆயினும் அவர் களுடைய கிளை வம்சத்தில் தாங்கள் தோன்றியதாகக் கடம்பூர் சம்புவரையர்கள் சொல்லிக் கொண்டார்கள். அவர்களுடைய முன்னோர்கள் திருக்கோவலூர் மலையமான் வம்சத்தாரிடம் கொண்டிருந்த பகைமையை சம்புவரையர்கள் மறக்கவில்லை. ஆதலின் மலையமானுடைய பேரப் பிள்ளை சோழ சாம் ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக முடி சூடுவதை அவர்கள் விரும்பாதது இயற்கையே யல்லவா?

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## விதியை வென்ற உழவன்



முன்னொரு காலத்தில் அர சன் ஒருவன் வீரர்கள் சிலருடன் வேட்டை ஆடுவதற்காகக் காட் டிற்குச் சென்றான். வழியில் ஒரு மரத்திலிருந்த பறவை இறக் கைகளை அடித்துக் கொண்டு ஏதோ கத்தியது. உடனே அரசன் சகுணம் பார்ப்பதிலும் பறவைகளின் மொழி அறிவ திலும் தேர்ச்சி பெற்ற வீரன் ஒருவனை அழைத்து “அந்தப் பறவை என்ன சொல் கிறது?” என்று கேட்டான். அதற்கு அந்த வீரன், “அரசே பறவை நம்மைப் பற்றி ஏதும் சொல்லவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் புல் வெட் டுவதற்காக இங்கு வரும் உழ வன் ஒருவன் பாம்பு கடித்து இறந்து விடுவான் என்று சொன் னது” என்றான். அவன் சொல்லி வாய் மூடவில்லை கையில் புல் அறுக்கும் அரிவாளுடன் ஒருவன் அவ்வழியே சென்றான். அவனைக் கண்ட அரசன் பறவை சொன்னபடி நடக்கி றதா என்பதை அறிய ஆவல் கொண்டான். அதனால் தன் வீரர்களுடன் அங் கேயே தங்கி இருந்தான். மாலைநேரமாயிற்று தொலைவில் தலையில் புல் கட்டுடன் மெது வாகத் திரும்பி வந்து கொண்டி ருந்தான் அந்த உழவன். உடனே அரசன் சகுணம் சொன்ன வீர னைப் பார்த்து நீ சொன்னது என்ன வாயிற்று? இவனைப் பாம்பு கடிக்க மறந்து விட்டதா? இல்லை இவன்தான் எமனை ஏமாற்றி விட்டானா? இவன் எப்படிச் சாவிலிருந்து தப்பித் தான் என்பதை நீ எனக்கு விளக்க வேண்டும்” என்று கோபத்துடன் கேட்டான்.

“அரசே அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரவேண்டாம். அந்தப் பறவை சொன்னபடி தான் நடந்து இருக்கவேண்டும். இடையில் என்ன நிகழ்ந்தது என்று புரியவில்லை” என்று சொன் னான். தலையில் புல் கட்டுடன் வந்த உழவன் அவர் கள் அருகில் வந்தான். புல் கட் டில் அரிவாள் சொருகப்பட்டு இருந்தது. புல்கட்டைக் கீழே போடும் படி உழவனிடம் சொன் னான் அந்த வீரன். உழவனும் அப்ப டியே செய்தான். புல்கட்டுக் கீழே விழுந்தவுடன் அதைக் கட்டியிருந்த கயிறு அறுந்து விட்டது. உள்ளே அரிவா ளால் வெட்டப்பட்ட பாம்பு இறந்து கிடந்தது தெரிந்தது. எல்லோரும் வியப்பு அடைந் தனர். அரசே பாம்பு இவனைக் கொல்வதற்காக வந்து இருக் கிறது. ஆனால் அது இறந்துவிட்டது. எனக்குக் கார ணம் தெரியவில்லை. எதற்கும் அந்த உழவனிடம் கேட்கி றேன்” என்றான் வீரன். பிறகு உழ வனைப் பார்த்து நீ புல் வெட்டச் சென்றதிலிருந்து ஏதேனும் குறிப்பிடத்தகுந்த நிகழ்ச்சி நடந்ததா?” என்று கேட்டான்.

அதற்கு உழவன் “வழியில் ஒரு முதியவர் வந்தார். அவரை நான் வணங்கினேன். அவர் நீடூழி வாழ்க” என்று என்னை வாழ்த்தினார் அதுதான் நடந் தது. வேறொன்றும் இல்லை என்று சொல்லிவிட்டு தன் வழியே சென்றான். அதைக் கேட்ட வீரன் “அரசே இப் பொழுது உண்மை தெரிந்து விட்டது. அந்த முதியவரின் வாழ்த்தினால்தான் இவன் இன்று சாவிலிருந்து தப்பித் துக் கொண் டான். உயர்ந்த சான்றோர்களின் சொற்கள் பிரம்மன் எழுதிய தலை எழுத் தைக்கூட மாற்ற வல்லவை” என்று விளக்கம் தந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்தகால கற்பனையான உணர்வுகளில் மூழ்கிக் கிடப்பது நிகழ்கால அமைதியைக் குலைத்து விடுகிறது. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மகிந்த தரப்பை மீளவும் கொண்டுவரக் கடும் முயற்சி

விடுதலைப் புலிகளை ஆதரிப்பதுபோல சில தமிழ்த் தரப்புகள் காட்டிக்கொண்டாலும் உண்மையில் அவர்களின் உள்ளார்ந்தச் செயற்பாடுகள் விடுதலைப் புலிகளுக்கு எதிரானதாகும்.

ஆம், எங்கள் தமிழர் தாயகத்தில் ஒரு சிலர் விடுதலைப் புலிகள் அமைப்பை வெளிப்படையாகக் கண்டிக்கின்றனர். அவர்கள் தொடர்பில் நாம் அதிகம் ஐயுறவு கொள்ளவேண்டியதில்லை.

ஆனால், விடுதலைப் புலிகளையும் தலைவர் பிரபாகரனையும் நேசிப்பது போல காட்டிக்கொண்டு மறைமுகமாக புலிகளின் வீழ்ச்சியில் மகிழ்ச்சி கண்டு வரும் தரப்புகளே மிகவும் ஆபத்தானவை. இத்தகைய தரப்புகள் வெளிப்படையாகத் தங்களின் சுயஉருவத்தைக் காட்டாமல் ஆசாடபூதிகளாக நடிக்கின்றனர்.

இத்தகையவர்கள் மகிந்த தரப்பை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வரவேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக உள்ளனர்.

இங்குதான் தமிழ் இனத்துக்காக என்ற போர்வையில் ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

உண்மை. இதன் பின்னணியை ஆராயும் போது, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு எதிராகச் செயற்பட்டு, அநுரவின் ஆட்சியை வீழ்ச்சியடையச் செய்வதே இதன் உள்நோக்கமாகும்.

ஆம், ஜனாதிபதி அநுரவின் அரசுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்துவதன் மூலம் அந்த அரசாங்கத்தை வீழ்ச்சியடையச் செய்தால், அடுத்த ஆட்சி மகிந்த தரப்புக்கே சாத்தியமாகும்.

ஆக, மகிந்த தரப்பை மீளவும் ஆட்சியில் அமர்த்துகின்ற ஒரே நோக்கிலேயே வெவ்வேறு காரணங்களைச் சுட்டிக்காட்டி, ஜனாதிபதி அநுரவுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னாயத்தம் செய்யப்படுகின்றன.

உண்மை. ஜனாதிபதி அநுரவின் அரசாங்கத்தை வீழ்த்துவதில் ஒரு தரப்பு பௌத்த பிக்குகள் கங்கணம் கட்டி நிற்கின்றன.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் நாங்கள் முதுகெலும்போடு இருந்தோம். இப்போது எங்கள் முதுகெலும்பு முறிக்கப்பட்டுவிட்டன எனப் பௌத்த பிக்கு ஒருவர் பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

தவிர, திருகோணமலையில் சட்டவிரோதமாகப் புத்தர் சிலை நிறுவப்பட்டபோது, திருமலைக்குச் சென்ற நாமல் ராஜபக்ஷ அங்கு புத்த பிக்குகளுக்கு விருந்தளித்தார்.

ஆக, ஜனாதிபதி அநுரவின் ஆட்சியில் புத்த பிக்குகளுக்கு முன்னுரிமை இல்லை என்பது இதிலிருந்து தெரிகிறது.

அதே நேரம் இன சமத்துவத்தை ஏற்படுத்துகின்ற நடவடிக்கைகளில் அநுர அரசு தீவிரம் காட்டி வருகிறது.

இந்நிலையில் ஜனாதிபதி அநுரவுக்கு எதிராகத் தமிழ்த் தரப்புகளும் போராட்டம் நடத்தத் தலைப்பட்டுள்ளன எனில், அவர்களின் நோக்கம் எதுவாக இருக்கும் என்பது ஊகித்தறிதற்குரியது.

ஆம், கடந்த கால ஆட்சியாளர்களுடன் ஒப்பிடும்போது ஜனாதிபதி அநுரவின் ஆட்சி தமிழ் மக்களுக்குத் தேவை என்பது நிதர்சனமான உண்மை.

நிலைமை இதுவாக இருந்தும் ஜனாதிபதி அநுரவையும் நாம் எதிர்க்கின்றோம் என்றால், அதன் உள்ளார்ந்தம் என்ன என்பதை நம் தமிழ் மக்கள் நிச்சயம் புரிந்து கொள்வர்.

### பயங்கரவாதத் தடைச் சட்டத்தை

# எதிர்த்தவர்களே இன்று அதை மீளுருவாக்க முனைகின்றனர்

### சாடுகிறார் சுமந்திரன்

(கொழும்பு)

2023 இல் அப்போதைய அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாடிய தேசிய மக்கள் சக்தி, இப்போது பாதுகாப்புத்தரப்பினரின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து அதனையொத்த சட்ட வரைவையே பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு எனும்பெயரில் வெளியிட்டிருப்பதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

தற்போது நடைமுறையிலுள்ள 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கர வாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் எனும் புதிய சட்டத்தைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதனை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவு நீதியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளப்பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பதிலீடு செய்யும் வகையில் அரசாங்கத்தினால் புதிதாக வெளியிடப்பட்டிருக்கும் வரைவில் முன்னைய திருத்தச் சட்டமூலங்களை விடவும் மோசமான விடயங்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன.

புதிய சட்ட வரைவின் உள்ளடக்கங்கள் குறித்துத் தாம் ஆராய்ந்து வருவதாகவும், அதற்கமைய இவ்வரைவின் உள்ளடக்கங்களில் பெரும்பாலானவை கடந்த 2023 ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் உள்ளடக்கங்களையே ஒத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

அதுமாத்திரமன்றி இப்புதிய வரைவைத் தயாரித்த நிபுணர் குழுவில் அங்கம் வகித்த பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள், பயங்கரவாத செயற்பாடுகளைத் தடுப்பதற்கு இப்புதிய வரைவு கூடப் போதுமானதல்ல என முரண்பட்டதாக அறியக்கிடைத்தது.

எனவே எதிர்க் கட்சியாக இருந்தபோது முன்னிறுத்திய தமது கொள்கையைப் புறந்தள்ளிவிட்டு, இப்போது அரசாங்கம் பாதுகாப்புத்தரப்பினரின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து இவ்வரைவை வெளியிட்டிருப்பதாக விசனம் வெளியிட்டார்.

இவ்வாறானதொரு பின்னணியில் புதிய வரைவின் உள்ளடக்கம் தொடர்பில் முழுமையாக ஆராய்ந்ததன் பின்னர், வெகுவிரைவில் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி நீதியமைச்சுக்குக் கடிதம் அனுப்பி வைப்போம் என்றார். (ந-7)

## நாட்டில் இன்றும் மழைக்கு வாய்ப்பு

(கொழும்பு)

வடக்கு, வடமத்திய, ஊவா, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களிலும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் இன்று அவ்வப்போது மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது குறித்து அத்திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

குறிப்பாக கிழக்கு, ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும்.

மேற்கு, சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும்.

இதேவேளை காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் ஆங்காங்கே மழை பெய்யக்கூடும்.

அத்துடன் சிலாபத்தில் இருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளிலும், காலியில் இருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகம் மணிக்கு 45 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படுவதால் கடற்றொழிலாளர்கள் அவதானத்துடன் இருக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளனர். (ந-7)

## கலைஞனின் குரல் இதழ் வெளியீடு

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் மாதாந்த வெளியீடான கலைஞனின் குரல், அதாவது இதழ் வெளியீடானது இன்று திங்கட்கிழமை மாலை 03.00 மணியளவில் கடற்கரை வீதி பாஷையூரில் அமைந்துள்ள மன்றச் செயலாளரின் இல்லத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கு கலைஞனின் குரல் ஆசிரியர் இரா.மதிகரன் தலைமை தாங்கவுள்ளார். (ந-7)

## மன்னாரில் இளம் குடும்பப் பெண்ணைக் காணவில்லை

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சௌத்பார் பகுதியில் வசித்து வந்த 21 வயதுடைய இளம் குடும்பப் பெண்ணைக் காணவில்லை என குறித்த பெண்ணின் உறவினர்களால் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் சௌத்பார் பகுதியில் வசித்து வந்த இளம் குடும்பப் பெண்ணை அவரது கணவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை ( 10) மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பல் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றுள்ளார்.

மனைவியை வைத்தியசாலையில் விட்டு, வீடு திரும்பிய கணவன் மீண்டும் சிறிது நேரத்தில் தனது மனைவியை அழைத்துச்செல்ல வைத்தியசாலைக்குச் சென்ற போது மனைவியை வைத்தியசாலையில் காணவில்லை.


இந்நிலையில், கணவர் மற்றும் உறவினர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த குடும்பப் பெண் காணாமல் போனமை குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியத்தை வளர்த்ததில் சுந்தரம் டிவகலாலாவின் வகிபாகம்

**வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் ஓய்வு நிலை செயலாளர் அமரர். சுந்தரம் டிவகலாலா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு இன்று.அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**



எனது இனிய நண்பர் சுந்தரம் டிவகலாலா அவர்களுடன் 1963 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அறிமுகமாகிய அந் நாட்களிலிருந்தே நட்பு ஏற்பட்டது.

சுந்தரம் டிவகலாலா அவர்கள் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் தொடக்கம் பல உயர்பதவிகளை வகித்து, நிறைவாக, வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராகப் பதவி ஏற்று திருகோணமலைக்கு வந்தார்.

அப்பொழுது நான் அவ்வமைச்சில் பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப் பாளராகப் பணியாற்றிக் கொண்டு இருந்தேன். அவர் வடக்கு-கிழக்கு எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற திட்டத்தில் வடக்கு-கிழக்கு எழுத்தாளர்களால் எழுதப் பட்ட நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலை நூலகங்களுக்கும் பொது நூலகங்களுக்கும் வழங்கப்பட்டன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சோழர்கள் ஆட்சி புரிந்த காலப் பகுதியினை "பொற்காலம்" என அழைப்பது போல் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் டிவகலாலாவின் பணிக்காலம் ஒரு "பொற்காலம்" என்றே கூற வேண்டும்.

வடக்கு-கிழக்கு மக்களின் பண்பாட்டுப் பாரம்பரியத்தையும், அவர்களது கலை இலக்கிய விழுமியங்களையும் பேணி மேலும் வளர்ச்சியடையச் செய்யும் நோக்குடன் பலவிதமான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

- **கலைஞர் கௌரவம் (ஆளுநர் விருது), நூல் பரிசு**
- **கலைஞர்களுக்கான மாதாந்த உதவித்திட்டம் (ஓய்வூதியம்)**
- **தமிழ் இன்னியம்**
- **நூல் கொள்வனவும் விநியோகமும்**
- **நூல் வெளியீடு, ஆய்வு நூல்கள், அரிதான நூல்கள்**
- **நாட்டார் பாடல்கள் இசையுடன் ஒலி,ஒளி நாடகங்களின் பதிவு**
- **சிற்பக் கண்காட்சி**
- **ஓவியக் கண்காட்சி**
- **நாடகப் பயிற்சிப் பட்டறைகள்**
- **கூத்து பயிற்சிப் பட்டறைகள்**
- **வடக்கு - கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெருவிழா**
- **ஆய்வரங்கும் நூல் வெளியீடும்**
- **கலாசார மண்டபம் அமைத்து வாத்தியக் கருவிகளின் பயன்பாடு**
- **கலாசார உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள், கருத்தரங்குகள்**
- **சகல மாவட்டங்களுக்குமான விழிப்பூட்டல் விஜயங்கள்**

இவ்வாறான பலமுன்னேற்ற கரமான திட்டங்களை 2000 ஆம் ஆண்டு ஓய்வு பெறும் வரை மேற் கொண்டார்.

மேற்காட்டப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மூன்றாண்டு திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அறிஞர்களையும் புத்திஜீவிகளையும் திருகோணமலைக்கு வரவழைத்து "கிளப் ஓலியானிக் ஹோட்டலில்" கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப் பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு அதனைச் செயற்படுத்தினார். மேற்காட்டப்பட்ட பல சிறப்பான திட்டங்கள் பற்றி விரிவாகப் பார்க் கலாம். தமிழ் இன்னியம் உரு வாக்கியது மிகப் பெரியவொரு பணியாகும்.

முழுக்க முழுக்க தமிழ் இசைக் கருவிகளைக் கொண்டு பறை மேளம், மத்தளம், உடுக்கு, புல்லாங்குழல், நோண்டி, பேரிகை, சங்கு என தமிழ் நாட்டிலேயே வழக்கொழிந்த இசைக் கருவிகளை இந்தியாவிலிருந்து தருவித்து திருகோணமலையில் உள்ள பாடசாலை மாணவர்களையும் இசைக் கலைஞர்களையும் கொண்டு பயிற்சி வழங்கி, பங்குபற்றும் கலைஞர்களுக்கு தமிழ்க் கலாசார உடுப்புக்களைத் தயாரித்து அதனை அவர்கள் அணிந்து பாண்ட் இசையை (இன்னியம்) செயற்படுத்தியது எல்லோரது பாராட்டுதல்களையும் பெற்றது.

அடுத்ததாக கலை இலக்கியப் பெருவிழாவில் இடம்பெற்ற "ஆய் வரங்கு" பற்றி நோக்கலாம். இவ்வாய்வரங்கிற்கு தமிழகத்திலிருந்து பேராசிரியர் இராம சுந்தரம், முனைவர்.ஏ.அரசு போன்ற தமிழ் அறிஞர்களை வரவழைத்து அவர்களது தலைமையில் படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைப் பின்னர் நூலுருவாக்கிய செயல் குறிப்பிடத்தக்கது.

அடுத்து சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது நாட்டார் பாடல்களை இசை, காட்சி அமைப்புக்களுடன் ஒலி,ஒளிப்பதிவு செய்யப்பட்டமை. வடக்கு- கிழக்குப் பிரதேசங்க ளிலுள்ள கிராமியக் கவிகளை பாடக்கூடிய இசைக் கலைஞர்களை அமைச்சிலுள்ள கலாசார மண்டபத்திற்கு வரவழைத்துப் பொருத்தமான வாத்தியங்களை இசைக்கக் கூடியவர்களையும் ஒன்று சேர்த்து சிறந்தமுறையில் செயற்படுத்தியதைக் கூறலாம்.

அடுத்து குறிப்பிடத்தக்க வொன்று நூல் வெளியீடு, அமரர் செங்கையாழியான் அவர்களால் தொகுத்துத் தரப்பட்ட "ஈழத்துச் சிறுகதை" தொகுதியினை வெளியிட்டதோடு, சுவாமி விபுலானந்தா, புலவர்மணி ஏ.பெரிய தம்பிப்பிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, கலாசூரி விநாயகமூர்த்தி ஆகியவர்களது நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டமை. ஏறக்குறைய இருபதுக்கு மேற்பட்ட நூல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டன.

எமது பாரம்பரியக் கலையான கூத்துக்கலை மாகாண, தேசிய மட்டங்களுக்குப் பாடசாலை மாணவர்களால் கொண்டு செல்லப்படும் ஒழுங்கு இடை நிறுத்தப்பட்டதும், அதனை மாகாண மட்டம் வரை தமிழ்மொழித்தின நிகழ்வில் சேர்க்க வேண்டுமென வலியுறுத்தி அதற்கான நிதி உதவியினையும் பரிசுத் தொகை யினையும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக வழங்கி செயற்படுத்துவதில் நானும் சேர்ந்து செயற்பட்டேன்.

பாடசாலை மாணவர்களை "எஜமானர்கள்" என்று அழைத் தார். மாணவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் மூலம் செய்து கொடுப்பதில் கரிசனை மேற்கொண்டார். இதே போன்று மாகாண கல்வித் திணைக் களத்தினை ஊக்கப்படுத்தி "தமிழ் சிறப்பு மலரையும்" வெளியிடச் செய்தார்.

மாகாண கலை இலக்கிய விழாவோடு தொடர்பாக வெளியிடப்பட்ட சிறப்பு மலர்கள் மிகவும் பயனுள்ள ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்தன.

வவுனியாவில் நடைபெற்ற தமிழ் இலக்கிய விழாவின் போது வெளியிடப் பட்ட "மருதநிலா" என்னும் பெயர் தாங்கி வந்த சிறப்பு மலர் எல்லோரது பாராட்டுதல்களையும் பெற்றது.

நிறைவாகச் சிறந்தவொரு சிந்தனையாளன் என்பதற்கு எடுத்துக்காட்டாக "ஆறுதல்" என்ற நிறுவனத்தை ஆரம்பித்து அதன் பொறுப்பாளராகவிருந்து செயற்பட்டு வருவது, ஓய்வு பெற்ற பின்னரும் மக்களுக்கான சேவை தொடர வேண்டுமென்னும் அவரது தாரக மந்திரத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. அமைச்சில் இருவரும் இணைந்து பணியாற்றிய காலம் பசுமை நிறைந்த தொன்றாகும்.

**கலாபூசணம்**
**எஸ்.எதிர்மன்னசிங்கம்**
**ஓய்வுநிலை கலாசாரப் பணிப்பாளர்,**
**வடக்கு- கிழக்கு மாகாணம்.**


## ட்ரோன் விமானங்களை ஒழுங்குபடுத்துவதற்கு முறையான வேலைத்திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

பறக்கும் ட்ரோன் விமானங்களை ஒழுங்குபடுத்துவதற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்று அறிமுகப்ப டுத்தப்படவுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் கெப்டன் தமிந்த ரம்புக் வெல்ல கருத்து வெளியிட்டு ள்ளார்.

**இதன்போது வணிக ரீதியான பெறுமதி கொண்ட**



**அனைத்து ட்ரோன் விமானங்களும் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.**

**இதேவேளை,** விமானப் போக்குவரத்து அதிகாரசபை இந்த ட்ரோன் விமானங்களை ஒழுங்கு படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது எனவும் இதில் மனிதர்களை ஏற்றிச் செல்லும் ட்ரோன்கள் மற்றும் ஆளில்லா ட்ரோன்கள் என இரண்டு பிரிவுகள் உள்ளன.

இவை முறையாக வானில் பறக்கவிடப்படுவதற்கான **ஒழுங்குவிதிகளையும் அறிமுகப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோட்டார் சைக்கிள்- லொறி விபத்து - ஒருவர் படுகாயம்

(கொழும்பு)

நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியில் வேண்டி கோனர் பகுதியில் மோட்டார் சைக்கிளும், லொறியும் நேருக்கு நேர் மோதி விபத்துக் குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் சிக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நுவரெலியா பகுதியிலிருந்து ஹட்டன் நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள், எதிர் திசையில் வந்த **லொறியுடன் மோதியே விபத்துக்குள்ளாகியுள்ளது.**

**விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி**



நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளார்.

**இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (8)**

## பாடப் புத்தக...

கும் வகையிலுமே அமையும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்துக்கு எதிராகவோ அல்லது அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கவோ நாங்கள் செயற்படபோவதில்லை. ஏனெனில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அரசாங்கத்துக்கே எதிராக அமையும். எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் தவறை சுட்டிக்காட்டும்போது அதனை ஏற்றுக் கொள்ளும் மனநிலை அரசாங்கத்துக்கு இல்லை. புதிய கல்விக் கொள்கை அரசாங்கத்துக்கு எதிரானதாகவே திரும்பியுள்ளது. இலங்கைக்குப் பொருத்தமான வகையில் புதிய கல்விக் கொள்கையை அமுல்படுத்த வேண்டுமே தவிர மேற்குலக நாடுகளுக்குப் பொருத்தமான வகையில் அல்ல என்பதை அரசாங்கம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

பாடப்புத்தகத்தில் சேர்க்கப்பட்ட சர்ச்சைக்குரிய விடயத்தை புத்தகத்தில் இருந்து நீக்குவதாக கல்வி அமைச்சர் குறிப்பிடுகிறார். இது அரச நிதி முறைகேடு இல்லையா? இந்த செயற்பாட்டுக்காக நாங்கள் நிச்சயம் வழக்குத்தாக்கல் செய்வோம். ஆட்சிக்கு வந்தவுடன் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதாக அரசாங்கம் குறிப்பிட்டது. பாடப்புத்தகத்தைக் கூட முறையாக அச்சிடாத அரசாங்கம் எவ்வாறு புதிய அரசியலமைப்பை உருவாக்கும். இந்த அரசாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக்கினால் அது ஒற்றையாட்சிக்கு எதிரானதாகவும் நாட்டைப் பிரிக்கும் வகையிலும் தான் அமையும்.

ஆகவே புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்று தேவையற்ற விடயங்களை முன்னெடுக்காமல் பதவிக் காலத்தை நிறைவு செய்து விட்டு வீடு செல்லுமாறு அரசாங்கத்திடம் குறிப்பிட்டுக் கொள்கிறோம் என்றார். (ந-7)

## இளைஞன்...

காயமடைந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த சிவராசா சிவலக்சன் (வயது 23) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி நேற்று முன்தினம் சனிக்கிழமை பயணித்த சொகுசு புகையிரதத்துடன், அரியாலை 13 ஆம் கட்டைப் பகுதியில் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையை மோட்டார் சைக்கிளில் கடக்க முயன்ற இளைஞன் விபத்துக்குள்ளான நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த புகையிரதக் கடவை பாதுகாப்பற்ற கடவையாகக் காணப்படும் நிலையில், பல விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்ற நிலையில் அதனைப் பாதுகாப்பான புகையிரதக் கடவையாக மாற்றம் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் பல்வேறு தரப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ள போதிலும், தொடர்ந்து அது பாதுகாப்பற்ற கடவையாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7,33,104)

## சங்குக்...

இழுத்தடிப்பதற்கான இந்த முயற்சியை உரியவாறு கையாண்டு, இவ் வருடத்துக்குள் தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களை எவ்வாறு பிரயோகிப்பது என்பது குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் எதிர்வரும் 16ஆம் திகதி மாலை தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் அடுத்த வாரம் கூடி ஆராயவுள்ளன.

மாகாண சபைத் தேர்தல்கள் எந்த முறைமையின் கீழ் நடத்தப்பட வேண்டும் என்பதை ஆராய்வதற்கும், அதுகுறித்த விதப்புரைகள் மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்கும் 3 மாத கால அவகாசம் வழங்கப்பட்ட 12 பேரடங்கிய விசேட செயற்குழுவை நியமிப்பதற்கான யோசனை ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான நளிந்த ஜயதிஸ்ஸவினால் கடந்த வாரத் தொடக்கத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பாராளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிப்பது மாகாண சபைத் தேர்தலை நடாத்தாமல் இழுத்தடிப்புச் செய்வதற்கு மேற்கொள்ளும் ஒரு முயற்சி என தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் ஏற்கெனவே கடும் விசனத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

மறுபுறம் கடந்த வியாழக்கிழமை தேசிய பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளைச் சந்தித்த இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, அரசாங்கம் வெகுவிரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும் எனத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான தொரு பின்னணியிலேயே இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## திருக்...

தொடர்ந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் ஜனாதிபதி, 15 ஆம் திகதி மதியம் 2 மணியளவில் வேலணை தெற்கு ஸ்ரீ சுப்பிரமணியம் சுவாமி கோவில் முன்றலில் நடைபெறும் பொங்கல் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார்.

பின்னர் அங்கிருந்து மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெறும் பொங்கல் நிகழ்வில் மாலை 4 மணியளவில் கலந்து கொள்ளவுள்ளார்.

மறுநாள் 16 ஆம் திகதி காலை 09 மணிக்கு மீசாலை ஆரம்ப பாடசாலையில் வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கான காசோலை வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்வார்.

பின்னர் மதியம் 2 மணியளவில் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் "முழு நாடும் ஒன்றாக" போதைப்பொருள் ஒழிப்புக்கான தேசிய செயற்பாட்டு நிகழ்விலும் அவர் பங்கேற்கவுள்ளார். (ந-7)

## சீன வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

சீன வெளியுறவு அமைச்சர் வாங் ஹி இன்று இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரை சீன வெளியுறவு அமைச்சர் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2026.01.11 — சீட்டிழுப்பு இலக்கம் 6071 — W 5 3 1 0 4 8
அத சம்பத — W 1 0 4 8 — சீட்டிழுப்பு இலக்கம் 0646
சுப தவசக் — 2026.01.11 — சீட்டிழுப்பு இலக்கம் 187 — இடபம் 34 39 45 — 0204
தன நிதானய — திகதி 2026.01.11 — சீட்டிழுப்பு இலக்கம் 2101 — H 16 18 19 28 H
மெகா பவர் — திகதி 11/01/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2419 — W 13 09 12 19 32
ஜய — திகதி 2026.01.11 — சீட்டிழுப்பு இலக்கம் 0339 — W 4 4 0 1
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4313 — சீட்டிழுப்பு திகதி 11.01.2026 — G 22 33 43 78 — G
ஹதஹன HANDAHANA — சீட்டிழுப்பு திகதி 2026.01.11 — சீட்டிழுப்பு இலக்கம் 1380 — மேடம் 21 28 40 59 மேடம்
உத்தியோகபூர்வ முடிவுகள் — 11.01.2026 — வெற்றி வாரம் 0779 — U — 8 5 4 1 3 3 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.32,609,826.40
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3045 — சீட்டிழுப்பு திகதி 2026.01.11 — ஞாயிற்றுக்கிழமை — 09 47 58 60 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 88,728,353.60
சனிதா — திகதி 11.01.2026 — வெற்றி வாரம் 5206 — 33 48 54 80 Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,137,487.60
சசிரி — வெற்றி வாரம் 875 — சீட்டிழுப்பு திகதி 11.01.2026 — ஞாயிற்றுக்கிழமை — 27 34 37 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4757 — சீட்டிழுப்பு திகதி 11.01.2026 — ஞாயிற்றுக்கிழமை — 09 10 12 34 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,027,278.80
லக்பதி — G 12 23 28 63 66 — சீட்டிழுப்பு வாரம் 2221 — 11.01.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.619,701,444.60
அத கோடிபதி ADA KOTIPATHI — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 2871 — சீட்டிழுப்பு திகதி 2026.01.11 — 12 30 54 62 O — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,930,881.60


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதையல் தோண்ட முற்பட்ட நான்கு பேர் அதிரடிக் கைது

கிளிநொச்சி ஏ-09 பிரதான வீதியில் அமைந்துள்ள இலங்கை மின்சார வாரியத்திற்குச் சொந்தமான சுற்றுலா இல்லத்தில் இரகசியமான முறையில் புதையல் தோண்ட முயன்ற மின் சார வாரிய ஊழியர்கள் நான்கு பேர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, கடந்த சனிக்கிழமை குறித்த மின்சார வாரிய விடுதியில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன் போதே குறித்த நால்வரும் அனுமதியின்றி அரசாங்க நிலத்தைச் சுரண்டுதல் மற்றும் சுரங்கம் தோண்டுதல் போன்ற குற்றத்திற்காக சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடையப் பொருட்களுடன் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்களை இன்று 12 கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(ந-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4802)

076 825 7716 (ஆகாஸ்)

## பண்ணை தொழிலாளர்கள் தேவை

கால்நடை விலங்குகளை மற்றும் தோட்டங்களைப் பராமரிக்கக்கூடியவராக இருக்க வேண்டும். திருநெல்வேலியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. ஆண்களுக்கு 65000/= பெண்களுக்கு 45000/= வரையும் வழங்கப்படும் (1904)

077 354 9140

## மணல் விற்பனை/ பொமிட் போட்டு தரப்படும்

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற பூச்சு மணல் விற்பனைக்கு உண்டு. மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும். 35000/= (1925)

076 324 9977

## விற்பனைக்கு

பொங்கல் அகப்பை (சிரட்டை) விற்பனைக்கு உண்டு. (6530)

077 210 5286

## மாப்பிள்ளை தேவை

01.நல்லூர், இந்து, 1990, மூலம், Grauated, Australia பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
02.புங்குடுதீவு, சாவகச்சேரி, இந்து, 1990, மகம், Grauated, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
03.நயினாதீவு - மல்லாகம், இந்து, 1991, சதயம், Grauated, Newzealand Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
04.காரைநகர், இந்து, 1992, மிருகஷீரிடம், Masters, Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
05.இருபாலை, இந்து, 1993, திருவோணம், Masters, Germany Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
06.சாவகச்சேரி, இந்து, 1990, உத்திரட்டாதி, Grauated, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(35004)
07.சாவகச்சேரி, இந்து, 1995, கேட்டை, Diploma in Arts phycologist, Canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(44161)
08.கொக்குவில், இந்து, 1994, விசாகம், Bsc(UK), UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(50294)
09.அளவெட்டி, இந்து, 1996, உத்தரம், Bsc(Forensic Science), Msc (Toxicology), UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(30340)
10.கொக்குவில், இந்து, 1994, மகம், MBBS, Germany Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (47776)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு. (C-4804)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
076 528 4510

## வேலைவாய்ப்பு

PRIME VET CARE Veterinary Hospital

கோண்டாவில் சந்தி, பலாலி வீதியில் இயங்கிவரும் எமது தனியார் கால்நடை வைத்திய நிலையத்திற்கு (PRIME VET CARE) முழுநேர மற்றும் பகுதிநேர பெண் அலுவலக உத்தியோகத்தர் தேவை.. (1923)

மேலதிக தகவல்களிற்கு :
077 074 3671, 075 709 7497

## கனடா விசாக்கள்

### மீண்டும் ஓர் புதிய சந்தர்ப்பம்

இப்பொழுதே காலம் தாழ்த்தாமல் விண்ணப்பியுங்கள்...



CANADA VISIT VISA

- ✓ சிநேகபூர்வமான சிறந்த ஆலோசனைகள்.
- ✓ நேர்மையான முறையில் விண்ணப்பிக்கப்படும்.
- ✓ சட்டத்தரணிகள் மூலம் ஒப்பந்தம். (100% Money Back Gurantee)
- ✓ 99% கடந்தகால வெற்றி வீதம்.

13 வருடகாலமாக தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்ற WINSTAR VISA CONSULTANTS உடன் இணையுங்கள்.

கண்டிப்பாக முன்பதிவு செய்து நேரில் வரவும்.

முன்பதிவுகளுக்கு - 071 071 6979

WINSTAR CONSULTANTS PVT LTD
45, VEMBADI STREET, JAFFNA. (1924)

## வட இந்திய யாத்திரை

### காசி அயோத்தி சீரடிபாபா யாத்திரை

ஆரம்பம் : 10.03.2026 நாட்கள் : 15 யாத்திரிகர்கள் : 15

தரிசிக்குமிடங்கள்

டெல்லி, அட்சயதாம், நாராயணர் கோவில், இந்திராகாந்தி வீடு, இந்தியா கேற், வேறு இடங்களும் பார்க்கலாம். ஆக்ரா, தாஜ்மகால், செங்கோட்டை, மதுரா, கிருஷ்ணஜென்ம பூமி, பிரேம்மந்திரம், அலகாபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி சங்கமம், சயன ஆஞ்சனேயர், நேரு வீடு, சங்கராச்சாரியார் மண்டபம், கயா, முன்னோர்களுக்கு பிதுர்கடன் சிரார்த்தம் செய்யும் இடம், புத்தகாய, புத்தாலயங்கள், காசி விஸ்வநாதர், விசாலாட்சி, காலபைரவர் உட்பட 15 இடங்கள் தரிசனம்

மாலை 6.30 இற்கு கங்கா ஆர்த்தி பார்த்தல் காசியில் 3 நாட்கள் தங்கி சீரடி பாபா தரிசனம்,சனி சிங்கனாப்பூர், இன்னும் பல இடங்களும் போகலாம். சீத்தாமடி, சீதை பூமியுள் புதையுண்ட இடம், திரியம்பகேஸ்வரர், ஜோதிலிங்கமும் மற்றும் இராமேஸ்வரம் 21 தீர்த்தமாடல், இராமேஸ்வரலிங்க வழிபாடு (சிவதரிசனம்), நவபாஷாணம், திருப்புலானி, உத்தரகோச மங்கை பார்த்து மதுரை மீனாட்சி தரிசனம் முடித்து சென்னை வருகை.

ஒரு நாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம். மறுநாள் நாடு திரும்பல்

பெற்றுக்கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்

5விமானப் பயணங்கள். 3 வேளை பிராமண சமையல் ஆட்கள் சமைத்த சைவ உணவு, ரீ, கோப்பி, மினரல் வோட்டர், AC வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரேன் கொமட், இணைந்த குளியலறை மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லவும் பயணம் முடிய திரும்பி யாழ்ப்பாணம் வரவும் வாகன ஒழுங்கு வசதிகள் செய்து தரப்படும். மேலும் விபரங்களைக் கேட்டுப் பதிவு செய்யவும்.

விபரங்களுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்: ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11. 077 736 2154
E-mail - sriranganathan2601@gmail.com (1901)

## வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

### அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

# 01 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி. யாழ்ப்பாணம்.
021 222 6113, 076 443 1576

### அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

# 10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536, 077 657 9349 (C4799)

- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்.
- 25 வருடங்களாக மக்கள் நம்பிக்கையை வென்ற நிறுவனம்.
- அனுப்பப்படும் பொதிகளுக்கு காப்புறுதி செய்ய வேண்டியதில்லை. முழுப் பெறுமதியையும் எமது நிறுவனம் பொறுப்பேற்கும்.
- உங்கள் வீடுகளுக்கு வந்து ஏற்றுக் கொள்ளப்படும் சேவைக்கு மேலதிக கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

கிளைகள்: # 01 தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | # 01, பெற்றோல் செட் எதிரில், நெல்லியடி. | CTB பஸ் நிலைய எதிரில் பருத்தித்துறை. | கொமர்ஷல் வங்கி அருகில் கிளிநொச்சி.


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் [illegible] எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org